தத்துவபோதினி.

பு. உ] சென்னைப்பட்டணம் கஅசுடுஙுல ஜஞன்மீ எஉ. [இல. உ.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.
க. கடவுள்துதி.....	உடு—ருசு
உ. விளம்பரம்.....	உள
ங. தத்துவபோதினி.....	உள
ச. திமையும் நன்மைபயக்கும்.....	உஅ
டு. நன்முயற்சிக்கு நற்பயன்....	ஙக
சு. பெண்களுக்குக்கல்வி.....	ஙச
எ. பகவத்கீதை.....	ஙக

	பக்கம்.
அ. ருக்குவேதசம்ஹிதை.....	சஉ
க. மநுநூல்.....	சக
கo. சரித்திரம்.....	ருஉ
ககு. நிருபம்.....	ருங
கஉ. விளம்பரம்.....	ருடு
கங. சந்தாதாரர்கள் அட்டவணை.....	ருடு
கச. விளம்பரம்.....	ருசு

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

பந்துவராளிராகம் - அடதாளசாப்பு.

பல்லவி.

வஹுவமம்வநம்தூ-ஊ-வு-ஜெ-வ்யஹெஹுவெகுஜாநய.

அநுபல்லவி.

ஹவெஹவெஹீ - ஏயஸதூஷ்டி;
நவெஹிஹவெஹீ - நூஹதீவிநஷ்டிஃ. (வஹு.)

சரணங்கள்.

க. வநகொவஸீ, ஸவ-ு - ஹ-ஒதாஞுாதூ,
வநகுாஒவம்வஹ - யாயஃகுொாதி;
தஏாதூஷ்டுயெங - வஸூஞ்சியீாஃ;
தெஷாம்வ-வம்ஸா - ஸ்வதம், நெதமெஷாம்...(வஹு.)

உ. நிதெ்யாநித்யாநாம் - வெதநஶ்சேதநாநாம்,
வநகோவைஹ்ருநாம் - யொவிதயாதிகாமாநு;
தமாத்மயெ - வஶ்ருஞ்ஜியீமாஃ,
தெஷாம்ஶாஜிஶ்ரா - ஶ்வதீ; நெதரெஷாம்.....(வஹ்வ.)

ஊ. வநகோவஶீ, நிஷ்ட்ரீ - யாணாம்வைஹ்ருநாம்,
வநகும்வீஜம்வைஹ்ரு - யாயஃகுரொதி;
தமாத்மயெ - வஶ்ருஞ்ஜியீமாஃ,
தெஷாம்ஹ்ருவம்ஶா - ஶ்வதம்; நெதரெஷாம்....(வஹ்வ.)

இதின் பொருள் எளிதில் விளங்குமாகிலும், அதை மொழிபெயர்த்துச்சொல்வது நலமென நினைக்கிறேம்.

பல்லவி.

என் துர்ப்புத்தியே! பலபற்றுக்களை விட்டொழித்து பிரும்மமொன்றையே, அறிந்துகொள். (இது இரண்டாம்வாக்கியம் முண்டகோபநிஷத்திலிருக்கிறது.)

அநுபல்லவி.

இவ்விடத்திலே யறிந்துகொண்டால் சத்தியம்கிடைக்கும்; இப்பிறப்பில் அறியாவிட்டால் பெருந்துன்பமுண்டாகும். (இது கேநோபநிஷத்துவாக்கியம்.)

சரணங்கள்.

க. தனித்த இறைவனுயும், சகலபூதங்களுக்கும் அந்தராத்மாவாயும், ஒரு ரூபத்தைப் பலவாக்குவோனுயும், உள்ள பரப்பிரும்மம் தமது ஹிருதயத்திலே யிருப்பதாய் அறிந்துகொண்டவர்களுக்கு மாத்திரம் சாசுவதமான சுகமேயன்றி, மற்றவர்க்கில்லை. (இது கடோபநிஷத்துவாக்கியம்.)

உ. நித்தியங்களிலெல்லாம் நித்தியமாயும், சேதனங்களிலெல்லாம் சேதனமாயும், பலவற்றிலொன்றுயு மிருந்துகொண்டு சகலவிருப்பங்களையும் தரும், பிரும்மமானவர் தமது ஹிருதயத்திலிருப்பதாய் அறிந்துகொண்ட தீரர்களுக்குமாத்திரம் நிலையான சாந்தியேயன்றி, மற்றவர்களுக்கில்லை. (இது கடோபநிஷத்துவாக்கியம்.)

ஊ. தனித்த இறைவனுயும், பலவற்றில் தொழிலற்றவாயும், ஒருவித்தைப் பலவாக்குவோராயும் உள்ள பிரும்மம் தமது ஹிருதயத்திலே இருப்பதாய் அறிந்துகொள்ளும் தீரர்களுக்குமாத்திரம் சாசுவதமான சுகம் கிடைக்குமேயன்றி, மற்றவர்களுக்கில்லை. (இது சுவேதாசுவதர உபநிஷத்துவாக்கியம்.)

(கடவுள்துதியை கிரந்தவெழுத்தில் அச்சிடுவது, சிலருக்கு உபயோகப்படவில்லை யாகையால், அவர்பொருட்டு அது பத்திரிகையின் கடையில் தெலுங்கிலும் அச்சிடப்படுகிறது.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் ஏஜண்டாகிய, கா. தெய்வசிகாமணி முதலியாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்திலுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..... ...க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்காக, ரூபாய் ஒன்றுக்கு -ஒரு அணா வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிக்கையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து ஏஜண்டுக்குத் தெரிவிக்கவேண்டியது.

தத்துவபோதினி.

சோதரர்களே! ஞானம் ஸம்பாதிக்கவேண்டிய மார்க்கத்தைக்குறித்து இன்று விசாரிப்பதாய் கடந்தபத்திரிகையில் குறிப்பிட்டோமல்லவா? எவ்விஷயத்திலாவது தத்துவக்கியானத்தை யடைய விரும்புவோமாகில் நாம் துரபிமானமென்பதை அடியுடன் விட்டொழிக்கவேண்டியது அத்தியாவசியகமாகும். இவ்வுண்மையை விளக்கும்பொருட்டு இரண்டொரு திருஷ்டாந்தங்களை யுரைக்கிறோம். முதலில் நமது நாட்டிலுள்ள பாஷைகளிலெல்லாம் சர்வசிரேஷ்டமானதாகியசம்ஸ்கிருதத்தை இங்கிலீஷ்பாஷையுடன் ஒப்பிட்டு, அவற்றின் தாரதம்மியத்துக்குரிய காரணத்தை விசாரிப்போம். சுமார் ஆயிரம்வருஷத்துக்குமுன் ஸம்ஸ்கிருதத்துக்கு ஈடானபாஷையே இவ்வுலகத்தில் கிடைப்பது அருமையாகவும், இங்கிலீஷோ சீரானபாஷைகளி லொன்றெனப் பொருந்தாததாகவும் இருந்தபோதிலும், பிரகிருதத்தில்இங்கிலீஷ்ஸர்வசிரேஷ்டமானதாகவும், ஸம்ஸ்கிருதமோ விசேஷப்பயனற்றதாகவும், ஆகிவிட்டன வல்லவா? இதற்கென்னகாரணமெனில், இங்கிலீஷார் பாஷையின் உத்தேசிய மின்னதென்று சரியாய் அறிந்துகொண்டு, அவ்வுத்தேசியம் கைக்கூடிவரும்படியான மார்க்கத்தை யனுசரித்ததன்மேல இங்கிலீஷ் பரிபூர்ணமான பாஷையாவதற்கும், நம்மவர் அவ்வாறு செய்யாமையினால் ஸம்ஸ்கிருதம் பூர்வத்திலிருந்த ஸ்திதியைக் காட்டிலும் சீரடையாமற் போவதற்கும் ஹேதுவாயிற்று. பாஷையினுத்தேசிய மெலலாங் கூடி ஒருவருக்கொருவர் தங்களபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்பதேயல்லவா? ஆகையால் எந்தபாஷையின் சகாயத்தால் நமது கருத்துக்களனைத்தையும் நன்றாயும் ஸ்பஷ்டமாயும் விளக்கக்கூடுமோ அதுவே சர்வசிரேஷ்ட பாஷையாகுமல்லவா? மனிதர்களுடைய ஞானமும், பாவமும், ஆனந்தானுபவங்களும், விருத்தியடையுந்தோறும் பாஷையும் அதற்கியைந்தவாறு விருத்தியடைய வேண்டுமேயன்றி, ஆ

தியிலே எந்தபாஷையாவது பரிபூர்ணமாக இருந்ததெனப்பொருந்தாது. எத்தேசத்திலும் பூர்வகாலத்தில் வாழ்ந்தவர்கள் தாங்களும், தங்கள்பாஷையும், சமயாசாரியமங்களும், தேவதைகளிடத்தினின்று மூண்டானதாகக்கூறி அதற்காதாரமாய்ச் சில புஸ்தகங்களே யெழுதிவைத்துக் கொண்டபோதிலும், விஷயவிசாரஞ் செய்யவேண்டுமெனும் ஆவல்மிகுந்த இக்காலத்தில் அத்தன்மையான கட்டுக்கதைகளே ஒருநொடிப்பொழுதேனும் ஒருவரும் நம்பமாட்டார்களென்று நாங்களுரைக்கவேண்டியதில்லையே. ஸம்ஸ்கிருதம் அது வழங்கிவந்தகாலத்திலுள்ள மற்றபாஷைகளைக்காட்டிலும் சிறந்ததாக விருந்திருக்கலாமாகிலும் அதை தேவபாஷையென்றுவது, அது ஆதியிலே பரிபூர்ணமாக விருந்ததென்றுவது, சொல்லப் பொருந்துமோ? முதலில் அதற்கு எழுத்தில்லையல்லவா; தேவபாஷையென்பதற்கு அப்படியெழுத்தில்லாமையே குறிப்பாகக் கொள்ளும்பக்ஷத்தில் பட்டுநால்காரர்பாஷையையும் அதற்குச் சமானமாகவே கொள்ளவேண்டுமல்லவா? இதுநிற்க ஸம்ஸ்கிருதம் வழங்கிவந்தகாலத்தில் பேசுகிடையாத பிரகிருதிபதார்த்தவிக்கியாஞதிசாஸ்திரங்களும், அனேகவித யந்திரங்களும், பலநாடுகளிலுள்ள சமயாசாரக்கோட்பாடுகளும், விசித்திரமானசரக்குகளும், இக்காலத்தில் புதிதாய் நமக்கு விளங்குகையில் இவற்றிற்குரிய பாவங்களுக்கெல்லாம் ஸம்ஸ்கிருதத்தில் பதங்களிருந்திருக்குமெனக் கூடுமோ? அப்படிகூடாதெனில் அதை பரிபூர்ணபாஷையென்று எவ்வாறு சொல்லக்கூடும்? பரிபூர்ணபாஷையாகாவிடில் அது தேவபாஷையாகுமோ? இத்தன்மையான பொதுக்கேள்விக்கு விடையாக நம்மவரில் சிலர் ஸம்ஸ்கிருதத்தில் சகல பாவங்களுக்கும் பதங்கள் கிடைக்குமென்று சொல்வார்களாகையால் குறிப்பாய் சிலமொழிகளேயும் வாக்கியங்களேயும் பொறுக்கி அவற்றிற்குரித்தான பிரதிபதங்களேயும் வாக்கியங்களேயும்ஸம்ஸ்கிருதத்திலிருந்து எடுத்துக்கொடுக்கும்படிக்கேட்போமாகில், அப்போது அவர்கள் தடைக்குட்படுவார்களென்பதில் சந்தேகமில்லை. மிளகாய், கிச்சிலிப்பழம், உருளைக்கிழங்கு, நீராவி, சொக்காய், நிஜார், பஸ்சடி, பொரிக்கறி, தகரம், தருப்பு, ஆல்பகோராபழம், அன்னாசிப்பழம், சந்தணஅத்தர், துபாக்கி, ரெயில், இத்தன்மையான நவீனபதார்த்தங்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் பதங்கள் கிடைக்குமென யாராவது உளைக்கக்கூடுமோ? இங்கிலீஷிலோவெனில் எவ்விதபாவத்தையும் விளக்க சொற்கள் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. அன்னியநாடுகளினின்றும் புதியபொருள்களைக் கிரகிக்கும்போது அவற்றிற்கு அவ்விடங்களில் வழங்கும்பேர்களேயும், கிரஹிப்பது உசிதமென்றும் ஆவசியகமென்றும் கருதி இங்கிலீஷார் சகலபாஷைகளிலுமுள்ள ரத்தினங்களெல்லாம்பொறுக்கித் தங்கள்பாஷையில் சேர்த்துக்கொண்டுவிட்டபடியால் அவர்கள்பாஷையானது சிறப்பில் ஓப்பற்றதாயிற்று. நம்மவரோவெனில் அன்னியபாஷையை நமதுபாஷையுடன் கலந்தால் இது அபரிசுத்தமாகிவிடுமென்கிற துரபிமானத்தால் அன்னியபாஷையிலுள்ள ஒருபதத்திற்கு பதிலாய் மார்களே வாக்கியமொன்றை வழங்குவார்கள். இதனால் விளையும் சாதகபாதகங்களே இவ்விடத்திற் இன்றெழுதிமுடியாதாகையால் மீதியை வருகிறபத்திரிகையில் உளைப்போம்.

தீமையும் நன்மைபயக்கும்.

சோதரர்களே! அருள்கடவுளின் திருஷ்டியில் நன்மை தீமை யிவ்விரண்டும் அடங்கியிருப்பதாக சாதாரணஜனங்கள் அபிப்பிராயப்பட்டபோகிலும், அவர்படைப்பில்தீமையே அடியோடில்லை யென்பது தத்துவக்கியர்களுடைய தீர்ந்தகொள்கையாகும். முதலெடுப்பில் இக்கொள்கை குசிதமான தென்றுதோன்றுமாகிலும் அதின்உண்மையை அறிய விசேஷப்பிரயாசப்பட வேண்டியதில்லை. உலகத்தில் நீ, விஷம், பாம்பு, தேள், இடி, பிரவாகம் முதலிய பிராணஹானிகரமான அநந்த பதார்த்தங்களிருக்கையில், தீமையேயில்லையென்பது பிரத்தியக்ஷஅனுபவத்துக்கு விரோதமாயிருக்கிறதேயன்று சிலர்

கூடிக்கலாம். ஆகிலும் கடவுள்படைத்ததெல்லாம் நன்மையேயாகிலும், நமது தொழிலின் கெடுமைகளால் அமிருதமும் விஷமாகுமென்பதை பிரண்டொரு திருஷ்டாந்தங்களால் விளக்கிக் காட்டுவோம். மானிடருடைய உயிர்வாழ்க்கைக்கு அன்னத்தைவிட ஆவசியகமானபொருள் வெகு அருமையாகயால், அதை அமுதமென்றே பிரஜைகள் வழங்கிவருகிறார்களல்லவா? அமுதத்துக்கொப்பான அன்னத்தையேமிதமிஞ்சியாகிலும், வியாதியால் தோஷித்திருக்கும் போதாகிலும், உண்போமாகில், அதனால் விளையவேண்டிய நன்மையும்நீங்கிப் பிராணஹானியும் நேரிடுவதைத் தினந்தோறும் காண்கிறோம். இதுநிற்க, சாதாரணமாய் நமதுப்பிராணனுக்குவைரியாகியவிஷமே வெகுகொடியரோகங்களை நிவர்த்தித்து, நமக்கு ஆரோக்கியமளிக்கின்றதல்லவா? ஆகையால்காலமும்பிரமாணமும்அறிந்து அவலம்பித்தால் ஸகலமும் இன்பமேதருமன்றித் துன்பம்விளைக்காது. ஆகிலும் பாம்புமுதலியதுஷ்டஜந்துக்களைப் படைத்ததில் ஒருவிதநன்மையும் விளங்கவிலையே யென்றுயாராவது ஆக்ஷேபிக்கலாம். சர்வகாருணியத்தால் மோதப்பட்டு, சர்வக்கியதையைச்சாதனமாகக்கொண்டு, சர்வசக்தராகிய இன்பக்கடவுளானவர், சர்வக்கியரென்போர் மனதிற்க்கு மெட்டாத அநந்தவிதவிசித்திரச்செயல்களில் ஒவ்வொன்றினுடைய உத்தேசியமின்னதென்று அல்பக்கியராகிய நாமறிந்து கொள்ளக்கூடாமையாலே, அவை ஒருநன்மையின் பொருட்டுப்படைக்கப்படவில்லை யென்பது, நமது அல்பஞானத்துக்கு அவினயுகமாயிருக்கவேண்டியதன்னியத்துக்கடுக்குமா? கியாளுநந்த சுவரூபியாகிய கடவுளின்இயல்புக்குத்தான்இசையுமா? ஒருவன் நீடித்து உயிர்வாழ்வதிலல் அயலாருக்கு விளையத்தக்க தீமையை நீக்கும்பொருட்டோ, அல்லது, அவன் நீண்டுவாழ்ந்தால், அவனுடைய மரணத்தைக்காட்டிலும் கொடியதானவும், பேர், பிரதிஷ்டை, மானம், முதலியவற்றிற்கும் ஹானிகரமானவும், தீவினைகளை நிவர்த்திக்க வேண்டுமெனும் கருத்தினலோ, வேறெந்த நற்சிந்தையுடனே கடவுளானவர் பாம்புமுதலிய சாதனங்களைக்கொண்டு கடிப்பித்துப் பரலோகமளிக்கிறார். இந்தப் பிரஸ்தாபங்களுக் கிப்போ தாவசியகமென்னவெனில் அதை யிதனடியி லுணர்க்கிறோம்.

"உண்மை விரும்புவோன்" என்னும் பெயரைக்கொண்டு ஒரு கனவான் அனுப்பிய நிருபத்தை இப்பத்திரிகையின் மற்றொரு இடத்திற் காண்பீர்கள். அவர் கும்பகோணம் ஜில்லாவிலுள்ள பலபண்டிதர்கள் கூடியியற்றிய வேதசமாஜகண்டனமென்னும் ஒரு சிறிய சஞ்சிகையை வெகு ஊக்கத்துடனும், நிஷ்பிருஹசித்தத்துடனும் படித்துப்பார்த்ததாகவும, அதிலுள்ள விஷயமும், அதையியற்றியிருக்கும்மாதிரியும், பண்டிதரென்போர்க்கிசையாத விதமாக விருக்கிறதென்றும், சத்தியகாமிகளுக்கு இயல்பானவாறு அவர் ரக்தம் பொங்கி, மனம்கொதித்து, புத்திபதைத்து, ஆத்மாதுடித்து வெகு ஆக்கிரகத்துடன் அந்த நிருபத்தை யெழுதினதாய்த்தோன்றுகிறது. அந்த நிருபக்காரருடைய சிந்தை பரிசுத்தமானதே யாகிலும், அவர் செய்கையை நாங்கள் சிலாகிக்கத்தக்கதில்லை. ஏனெனில் அந்த சஞ்சிகையைப்படித்த உடனே கிளம்பிய கோபஜ்வாலையடங்கிச் சற்று சாந்தமான மனதுடன் அவர் அந்த நிருபத்தை யெழுதியிருப்பாராகில், கண்டனத்தை யியற்றிய பண்டிதர்கள்மீது கோபிக்காமல், அவர்கள் விஷயத்தில் நாங்கள் உண்மையாகவே கிருதக்கியதையை விளக்க வேண்டியதென விதித்திருப்பார். வாய்கொண்டவரையில் வஞ்சனையின்றி வைதவரை வாழ்த்தவேண்டுமென நாங்களுரைப்பது புதுமையாகவிருக்கிறதென்று "உண்மைவிரும்புவோர்" மதிக்கலாம். ஆகிலும் அச்சஞ்சிகையெழுதின பண்டிதர்கள் உத்தேசியம் எத்தன்மையதாகிலும், அவர்களெழுதிய சஞ்சிகை மாத்திரம் எங்கள் விஷயத்தில் மஹோபகாரமாகவேமுடிந்தது. அதெப்படியெனில்விவரித்துக் காட்டுகிறோம்.

க-வது, எங்கள் ஸமாஜமேற்பட்டு ஒரு வருஷத்திற்குமேலானபோதிலும், நாங்க

ள்மாதத்திற்கொருதரம் பொதுவிஷயமாய் ஒருபத்திரிகையைப் பிரசுரப்படுத்துவதுதவிர வேறொன்றும் செய்யவில்லையல்லவா? நம்மபண்டிதர்கள் அச்சஞ்சிகையையெழுதாவிடில், இன்னமும்நாங்கள் சோம்பலே மேற்கொண்டு, தத்துவங்களே வெளியிடாமல், வீண்காலம் போக்கும்படி நேரிட்டிருக்குமல்லவா? அப்படிக்கன்றி, அந்தமஹானுபாவரால், அதற்கு விடையெழுதும்படி "உண்மை விரும்புவோர்" முதலிய சிலகனவான்கள் எங்களைக் கேட்கவும், நாங்கள் எங்களுக்குத் தெரிந்தவரையதற்குப் பதிலெழுதத் தொடங்கவும் காரணமாயிற்று.

இரண்டாவது, கிரீஸ்துவர், துருக்கர், முதலிய அன்னிய மதஸ்தர்கள் பலதலைமுறைகளுக்கு முன் முதல், ஹிந்துமதத்தைப் பலவாறும் நிந்தித்துப் புஸ்தகங்களெழுதின போதெல்லாம், இவ்வாறு சஞ்சிகையெழுதத் தோன்றுத நம்ம பண்டிதர்கள், எங்கள் கொள்கையை மாத்திரம் நிந்தித்து, அதுவும் நாங்களும் நசித்துப்போக வேண்டுமெனும் விருப்பத்தை விளக்கி ஒருகண்டனமெழுதினதில் அவர்களுடைய கருத்தின்னதென்று தெளிவாய் விளங்கவில்லையா? எங்கள் முயற்சியும், அன்னிய மதத்தார் யத்தனங்களைப் போலவே பல்பஜமானதென்று அவர்கள் மதித்திருந்தால் இவ்வளவு சிரமப்பட்டு, மெய்யும் பொய்யும் கலந்தாவது ஒரு கண்டனமெழுதும்படி நேரிட்டிரா தல்லவா? இதிலேயே எங்கள் கக்ஷியே பழுதற்றதென்றும் அதையாக்ஷேபித்தாலும், இல்லாவிடிலும், தங்கள் விருத்திக்கு மோசம் வருமாகையால், இவ்விரண்டு வழிகளையும் விட்டு அடங்காத பாம்புக்கு ராஜா மூங்கில்தடி யென்கிறபடி பேதண்டங்களே யனுசரித்துப் பாமரஜனங்கள் பிரமிக்கும்படியாகத்திட்டி தூஷித்திருக்கிறார்களென்றும், அதைப்படிப்பவர்களுக்குத்தானேய்விளங்கும். அனேகபண்டிதர்கள் ஒன்று கூடி பயமடைந்து கண்டனையெழுதத்தொடங்கி, அவர்களுக்கு ஆதாரமாகச் சரியானப் பிரமாணங்கிடைக்காமல் பிரமாணங்களைக் கற்பிக்கத்தொடங்கினர்களெனில் பேருக்கு அவர்கள்கண்டனம் எழுதினாலும் உண்மையில் எங்கள் கொள்கைகள் நிராக்ஷேப கரமானவையென்று உலகத்தாருக்கெல்லாம் சிபார்சு செய்தமாதிரியாகிறதல்லவா?

மூன்றாவது, நம்மவரில் ஒருவருக்கும் வலியமனம் நோகும்படியான காரியத்தை நாங்கள் செய்கிறதில்லை யென்பது எங்கள் பிரதிக்கினைகளில் ஒன்றாக விருக்கின்றமையாலும், நாங்களாணையிட்டுத் தகைந்துகொண்டது பற்றி உண்மை வெளியாகமல் போவதற்கு ஹேதுவாகவிருந்தபடியாலும், வாஸ்தவத்தில் நமது கொள்கைகளில் ஈடுபட்ட அந்தக்கண்டனையின்கர்த்தா, அவரைச்சூழ்ந்த பண்டிதர்களின் உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாமல் வெகு தந்திரமாய் அதையெழுதி முடித்திருக்கின்றமையாலும், கடைசியாக நம்மபண்டிதர்கள் சுவல்பசாலத்துக்குள் அவரைநோக்கி யார்குடியைக்கெடுக்க இந்த ஆண்டிவேஷம்கொண்டீரென கேட்கப்போகின்றமையாலும், நாமும் அவரைக்கண்டு மனம் நோவதுதர்மமுமன்று ஆவசியகமுமன்று. ஆண்டிவேஷம்கொண்ட கதையைக்கேட்க சிலர்விரும்பலாமாகையால் அதை இவ்விடத்திற் சுருக்கியுரைக்கிறேம். பூர்வத்தில் காஞ்சிபுரம் விஷ்ணு தேவஸ்தானத்திற்குள் ஒரு சிவாலயமிருக்கக்கண்ட ஒருசாத்தாதவன் எப்பாடுபட்டாகிலும அதைக் களையவேண்டுமென நிச்சயித்துக்கொண்டு ஒருகாவித்துணியும் கண்டைகண்டையாய்விபூதியும் தரித்துக்கொண்டு, அம்பட்டன் மயிரில் ஆலம்பால் விட்டுதிரித்து ஜடாமகுடம் செய்துக்கொண்டு, சுமக்கக்கூடியவளையில்ருத்திராக்ஷங்களையணிந்து, மூர்த்தன்னிய சைவரைப்போல "சிவோஹம் சிவோஹம்" எனசோஷித்துக்கொண்டு திருவாடுதுறை மடத்தில் நுழைந்த உடனே அம்மடாதிபதியானவர் ஒன்றுனபரமசிவனே ஆவிர்பவித்து வந்ததாக மதித்து சகலோபசாரங்களும்செய்து அவரைத்தன்மடத்தில் வைத்திருந்ததுமாத்திரமேயன்றி அவசானகாலத்தில் அவருக்குத்தன்பட்டத்தையும் தரித்தார். பிறகு இந்தசாத்தாதவன்உ-

லகத்திலுள்ள சிவஸ்தலங்களுக்கெல்லாம் ஒவ்வொருபடமெழுதிவைக்கையில் காஞ்சீபுரத்திலுள்ள மேற்கண்ட சிவாலயத்திற்குமாத்திரம் எழுதாமலிருந்துவிட்டான். பிறகுதிவ்விய ஸ்தலயாத்திரையின் பொருட்டென்று காஞ்சீபுரம் வந்துசேர்ந்த உடனேமடாதிபதியைக்காணவந்த பலருடன் கூடவிஷ்ணுஸ்தலத்தின் தர்மகர்த்தாக்களும் அவன்பேட்டிக்கு வந்தார்கள். அத்தருணத்தில அவன் தானின்னனென்றும், தன்கருத்தின்னதென்றும், வேண்டியவளைப்பொருளுதவிசெய்வதாயும், அவர்களுடன் அந்தரங்கமாய் எச்சரிக்கவே, அவர்கள் ஒரு இரவில் அக்கோயிலையிடித்துக்குளமாய்ப்பரித்துவிடவே மறுநாள்காலமை அவ்விடத்தில் பூஜைக்குவந்தகுருக்கள் அவ்விடத்தில் கோயிலுக்குப்பதில் குளத்தைக்கண்டு பரதவித்துத் தம்பிரானிடம் சென்று கதறிமுறையிட்டுக்கொண்டான். பிறகு அத்தம்பிரான் உண்மையாய் கோபித்தபாவனையுடன் அவ்வைஷ்ணவர்கள்மீது கோரட்டில் பிரியாதுசெய்ய, கோர்ட்டார் அவ்விடத்தில் சிவன்கோவிலிருந்ததற்கு என்னநிதர்சனமென்று கேட்டபடியால், அவன்தன்னிடத்தில் ஆயிரத்தெட்டுசிவாலயங்களுக்கும்படமிருப்பதாயும் அவற்றுள் அந்த ஸ்தலத்தின் படமொன்றென்றும் சொல்லி அப்படங்களெல்லாம் வருவித்துக்கோர்ட்டுமுன்பாகப்பரப்பினன். கோர்ட்டாரதைப்பரிசோதிக்கையில்மற்றஸ்தலங்களின் படங்களெல்லா மிருக்கையில் விவாதஸ்தலத்திற்கு மாத்திரம் படமிராமைகண்டு பிராது பொய்யென்று வைஷ்ணவர்கள் பக்கம் கோர்ட்டார் தீர்ப்புசெய்தார்கள். பிறகு ஒருக்கால் ஒருவைஷ்ணவன் ஒரு ஆபத்தானகாலத்தில் ஆண்டிவேஷம்பூண்டு அருகிலிருந்த ஒரு சிவன் கோயிலில் பதுங்கச்சென்ற உடனே அதிலுள்ள விக்கிரகம் நடுநடுங்கி அவனெதிரேவந்து நின்று யார்குடியைக்கெடுக்க இவ்வாண்டிவேஷம் பூண்டாய் எனக்கதறியழுது கேட்டுக்கொண்டதாய் ஒரு கதை பிருக்கிறதல்லவா? இவ்வாறே நம்மகண்டனையின் கர்த்தா தன்பேச்சுகளுக்காதாரமாக சுருதியில் இன்னின்னவிடத்தில் பிரமாணமிருக்கிறதென்று உரைத்திருப்பதுபற்றி அதைப்பரிசோதித்துப்பார்ப்பவர்கள் அவருடையபேச்சு பொய்யெனவும் எங்கள் கொள்கையே உண்மையானதெனவும் தீர்ப்புசொல்லப்போகிறார்களாகையால், நம்மபண்டிதர்கள் அவரைநோக்கி யார்குடியைக்கெடுக்க இவ்வாண்டிவேஷங்கொண்டீரெனக் கேட்பார்களெனபதில் சந்தேகமில்லையே.

சுவது, — கடைசியாக கடவுளானவர் ஒருவருடைய யத்தனத்துக்குப் பயனளிக்கும்முன் அந்த யத்தினம் அந்தரியமாய் செய்யப்படுகிறதாவெளிவேஷத்திற்கு மாத்திரமாவென்று பரிசோதிப்பது அனுபவசித்தம். சத்தியம் ஜயிக்குமேயன்றி பொய் ஜயிக்கமாட்டாதெனக் கடவுளானவர் வேதமூலமாய் வெளியிட்ட உண்மையை ஸ்தாபிக்கும்பொருட்டு எண்ணரிய பண்டிதர்கள் வெகுச்சிரமப்பட்டுத் தேடியும் அவருக்கொரு கவுரவமானப் பிரமாணமாவதளிக்காமற்போனதுமன்றி நாங்கள் எடுத்த புஸ்தகங்களிலெல்லாம் பிரமாணங்களை வாஸித்திருக்கிறார். கடவுளின் அருளால் வலியகிடைத்த அகந்தப்பிரமாணங்களில் ஆவசியகமற்றனவற்றை நிறுத்திவைப்பதில் எங்களுக்குண்டான சிரமம் ஒருப்பிரமாணமாவது அகப்பட்டாலும் போதுமென்று தேடிய பண்டிதர்களின் சிரமத்திற்குத் தாழ்ந்ததல்ல. வெகுவினையில் எங்களுடைய விடையை "உண்மைவிரும்புவோர்" பெறுவாராகையாலும், வேதஸமாஜகண்டனம் வெளியாகாதவரையில் மேற்குறித்த விடையை யெழுதுவதற்கு ஆவசியகமேயிராதாகையாலும் இந்த விடையை யெழுதும்படிச்செய்த பண்டிதர்கள் விஷயத்திலும் கண்டனையின் கர்த்தா விஷயத்திலும் உண்மைவிரும்புவோருக்கும், அவர் நண்பர்களுக்கும், இனி எப்போது முபகாரஸ்மரணமிகுமென்பதில் சந்தேமில்லை.

நன்முயற்சிக்கு நற்பயன்.

சோதரர்களே! மனப்பூர்வமாய் முயற்சிசெய்யவேண்டியதுமாத்திரம் நமதுக

டமையென்றும், பயனளிக்கவேண்டியது பரமபுருஷனுடையபாரமென்றும், அனைவர்க்குந் தெரியுமல்லவா. இந்தசித்தாந்தத்தின், உண்மையை எவ்விதத்தில் பரீக்ஷித்தாலும் அது நிலைநிற்கும். இதற்கு ஒரு லவுகிகதிருஷ்டாந்த முரைக்கிறேம். ஒரு காரியத்தை இன்னவிதமாக முடிப்பவருக்கு இன்ன வெகுமானமளிக்கப்படுமென சிமைராணியவர்கள் ஒரு விளம்பரத்தைப் பிரசுரப்படுத்தின பக்ஷத்தில், அதை யனுசரித்து அவர்கள் முகத்தையே அறியாத அன்னிய தேசத்திலுள்ள ஒருவன் அக்காரியத்தை, விரும்பியவாறு முடிப்பானுகில், மஹாராணியவர்கள் நிச்சயித்த வெகுமானத்தை யவனுக்குக் கொடுப்பிப்பார்க ளென்பதில் சந்தேகமுண்டோ? சகலவித சாபல்யத்துக்கும் ஆளாகிய கேவலம் மானிடருடைய நியமங்களிலே நாம் இவ்வளவு நம்பிக்கை வைக்கக்கூடுமாகில், நிச்சலஞானந்த சத்திய சுவரூபியாகிய நமது அருள்பிதாவானவர் தமக்குத் தாமாய் விதித்துக்கொண்ட நியமங்களினின்றும் தினையளவேனும் நழுவுவாரெனப் பொருந்துமோ? அவருடைய இருப்பு எவ்வாறு நித்தியமோ அவ்வாறே நன்முயற்சிக்கு நற்பயனும், தீச்செயலுக்குத் தீவினைவும், பயனுக்கிடைக்க வேண்டுமென அவரருளிய நியமமும் நித்தியமேயன்பதை யாரேனும் ஆக்ஷேபிப்பார்களென நாங்கள் நினைக்கவில்லை. நமது சுவப்பிரயோஜனத்தைக்கருதாமல், பரிசுத்தசிந்தையுடன் காருணியக்கடவுளிடத்தில் சலிக்காத நம்பிக்கையைவைத்து, அவரதாக்கியைபாலும், நமது நிலைமையாலும், வேதவிதிகளாலும், நம்மீது சுமந்திருக்கும் மிகப்பளுவான கடமைகளை, ஹேயவழிகளை யொழித்துச்செலுத்தமுயல்வோமாகில் நமக்குத்தப்பாமல் நற்பயனளிப்பதாய் பலவிதத்தில் கடவுள் அபயவாக்கிய மளித்திருக்கிறதென்பதற்கு ஒரு நிதர்சனம் கூறுகிறேம். "சேலஞ்வாஷிசுவதேசி" யென்னுமோர்பெரிய மனிதரனுப்பிய நிருபமொன்று இன்றிய பத்திரிகையில் பிரசுரமாயிருப்பதைக் காண்பீர்கள். அந்தநிருபத்தை நோக்குங்கால், செலத்திலுள்ள பல புத்திமான் தங்கள் சுவரூபத்தையும், கடமைகளின் வலுமையையும், கடவுளின் ஆக்கியையும் நிர்க்கமாகயோசித்து, ஹேயமானவும் குசிதமானவும் உபாசனமார்க்கங்களை விட்டொழித்து, ஆதியில் நமதுதேசத்தை யலங்கரித்த உத்கிருஷ்ட மார்க்கத்தில் மீண்டு, தமதுரூபத்தாலன்றி விசித்திரச் செயல்களினால் விளங்கும், அகிருசியபரமபுருஷனை உரித்தான உபாயமாகிய தியானமார்க்கத்தால் தொழுதேற்றிக்களிக்கத் தொடங்கினரென விளங்குமல்லவா? எங்களுடைய முயற்சியும் இதற்கு லஹுகாரியாக விருந்ததென்று அந்த "சுவதேசி" யெழுதியதைக் கேட்கநாங்களடைந்த வரையிறந்த சந்தோஷத்துக்குக்காரணமாகிய பரப்பிரும்மமே, அவ்வானந்தமித்தன்மையதென்று பூரணமாய் அறிந்து கொள்ள நமமவரனைவர்க்கும் சக்தியளிப்பாராக. எங்களுடையமுயற்சியும் ஒருவாறு உதவியிருக்கலாமாகிலும், இந்தச சன்மார்க்க அவலம்பத்துக்கு, செலத்திலுள்ள புத்திமான்களுடைய நிஷ்பக்ஷபாதமான ஆராய்ச்சியே முக்கியகாரணமெனக கொள்ளவேண்டியிருக்கிறது. ஏனெனில் இதரநாடுகளிலுள்ள புத்திமான்கள் பாமரர்களுடைய நிந்தைக்குப் பயந்தோ, அல்லது காலத்தால்வைரமேறிய துரபிமானங்களை யொழிக்கமாட்டாமலோ, மற்றெந்த ஹேதுவைப்பற்றியோ, எங்கள் முயற்சியைத்தகுந்தபடிமதிக்காமலிருக்கிறார்களல்லவா? கும்பகோணம் ஜில்லாவில், முக்கியமாய் கஸ்பா கும்பகோணத்தில் அனேகவித்துவான்களும் மேதாவிகளும் இருக்கின்றமையால், இந்தச்சன்மார்க்கத்தை நமது நாட்டில் முதலில் நாட்டிய பிரதிஷ்டையை அவர்களடைவார்களென நாங்களெதிர்பார்த்திருந்தோம். முதலில் சேலத்தாருக்கு இந்தப்பிரதிஷ்டைகிடைத்தபோதிலும், மற்றவர்களைக் காட்டிலும் காவேரிநீருண்பவர் மூந்துவார்க ளென்பதில், நாங்கள் சந்தேகிக்கவில்லை. வெகுவிரைவிலே அவர்கள் செயலைக் கொண்டாடும்படி நேரிடலாம். நம்முடைய யத்தனங்களுக்கு உடனேபயன் கிடைக்கவில்லையென்று சிலர் அதைரியப்படுகின்றமையால்

அதுசரியல்லவென்று எச்சரிக்க வேண்டியிருக்கிறது. நமதுதேகத்தில் ஒருசிரங்குவெடித்தால், அதையாற்ற எவ்வளவுகாலம் பிடிக்கிறதென்பதைக் கவனிப்போமாகில் தேகமெல்லாம் ரணம்கண்டால்அதைச் சமனப்படுத்தல் விரைவில் முடியாதென்று தானாய் விளங்கும். நமதுதேசத்தில் சிலநாளாய் நடந்தேறிவரும் அர்ச்சாமார்க்கத்தால் பலரும், அதை அறிந்திருந்தும்கேவலம் ஜிவனோபாயமாகச் சிலரும், இவ்வாறு சற்றேறக்குறைய அனைவரும் அதையே அவலம்பித்து வருகின்றமையால், வெகுவிரைவில் பயன்கிடைக்குமென்று எப்படி யெதிர்பார்க்கக்கூடும்? இதுநிற்க இத்தன்மையான நல்லகாரியங்களைத் தொடங்கும்போது, நமக்குகூலியளிக்கும் முன்கடவுளானவர் நாம் திருடமானவும், ஸ்திரமானவும் புத்தியுடன், பிரவர்த்தித்திருக்குறேமோஇல்லையோவென்பதைப் பரீக்ஷிக்கும் பொருட்டுப், பலவிதத்தடங்கல்களையும்சங்கடங்களையும் விளைவிப்பார். நாம் ஒருவிதசங்கடத்துக்கும் அஞ்சாமல் அவரிடத்தே நமது உறுதியான பற்றைவைத்து, லோபமின்றிப் பிரயத்தனம் செய்வோமாகில், கடைசியில் அதற்குத் தகுந்த வெகுமானந்தருவானென்பதில் சந்தேகமில்லை. ஆகையால சேலத்திலுள்ள நம்மசினேகிதர்களுக்கு நாங்களெச்சரிப்பது என்னவெனில் அவர்களைச் சுற்றிலுமுள்ளவர்களில் யாரெனிலும் பாமரத்தால் அவர்களையும் அவர்களனுசரிக்கும்மார்க்கங்களையும் பரிஹஸித்தால், வேனிரில் விடுவெந்துபோகுமெனப்பயப்படாமலும், அவர்களைப் பிரதியாய் நிந்திக்காமலும், கடவுள் நமக்குப்பகுத்தறிவளித்ததில் அவருடைய கருத்தையும், நமதுகடமையையும் மறக்காமலும், நன்மையியற்றி நற்கதியடைய வேண்டுமென்கிற தர்மசிந்தையுடன் மெய்மனச்சோர்வின்றிபிரயத்தனம் செய்வதே புருஷலக்ஷணமென்பதும்; அப்படிப் பிரயத்தனம் செய்வோமாகில் அதற்குரிய பயனை நமது நித்தியமான பிதா தப்பாமல் அளிப்பாரென்பதுமேயாம். நம்மைவிசேஷமாய்ப் பரீக்ஷிப்பது தர்மமல்லவென்று கருதியே, அவர் வெகுவிரைவில் நமக்கு உற்சாகமளித்திருக்கிறாரல்லவா? பங்காளத்திலிருந்த நம்மிலும் பலமடங்கு மேலானவர்களுடைய முயற்சிகளுக்கு இவ்வளவுவேகமாய் உற்சாகமளிக்காத அவரோநமக்கு ஒரு வருஷ காலத்துக்குள் இவ்வளவு சகாயம் செய்தாரெனில், நாம் சில்லரை துஷ்ணைகளுக்கேன் அஞ்சவேண்டும்? நம்மைப் பலர் நிந்தித்தபோதிலும், நாம் பிரதியாய் அவர்களை நிந்திக்காமலிருப்போமாகில் நாம் பலவித மேலான பயன்களை யடையக்கூடும். முதலாவது அவரவர் செயலுக்கியைந்தபடி கடவுள் கூலியளிப்பார்; உ-வது நம்மைப்பகைப்போரை நாம் எதிரிகளாய் மதித்துப் பிரதிசெய்யத் தொடங்குவோமாகில் தத்துவமின்னதென்று அவர்கள் மனதில் தைத்தபோதிலும் அவர்கள் ஹிம்ஸியாவேசத்தால் குவாதங்கள் செய்து பாமரஜனங்களை மலக்கச்செய்வார்கள். ஆகையால் நாம் அவர்களை நிந்திக்காமலே, உண்மையாயும் வினயமாயும் தத்துவங்களைப் பரவச்செய்வோமாகில், பிரகிருதத்தில் நம்மைபகைவரென மதிப்பவர்களே நமக்கு வெகுவிரைவில் ஆந்தரியமான நண்பராவார்கள்; ஊ-வதுபொறுமையை ஆசரிப்போமாகில் நமது கொள்கை வெகுவிரைவில் பூமிமுழுமையும் ஆளுமென்பதுதவிர குரோதத்தினால் விளையத்தக்க அளவற்ற துன்பங்களண்டாமலிருக்கும். இம்மாதிரியான எண்ணரியபயன்களை இன்றியபத்திரிகையில் விசாரித்து முடியாதாகையாலும்; சற்று யோசிப்பவர்களுக்கு அவைதாமாய் விளங்குமாகையாலும்; இவ்விடத்தில் அவற்றை விரித்துரைக்கவில்லை. கடைசியாக இவ்வளவு விரைவில் தயாபரி பூர்ணரான கடவுளிரங்கி நமக்குக்கை கொடுக்கத் தொடங்கியதற்காக எங்கள் அடிவயிற்றினின்றும் கொண்டாடி எங்கள் நன்றியறிவை விளக்குவதுமன்றி, இனியும் எங்களையும், சேலத்திலுள்ள எங்க ளன்பர்களையும், ஆதரித்து நன்மை பயக்கவேண்டுமென அவ்வள்ளலையே உறுதியாய் நம்பி வாழ்த்திக்கொண்டாடுகிறோம், "சேலநிவாஸி சுவதேசி" தனை செய்தனுப்பிய நிருபத்துக்காக அவரை

வந்திப்பதுமன்றி, அவர்களுடைய வரலாற்றையும், ஸ்திரிவிருத்திகளையும் குறித்து அவருக்கு ஒழிந்தபோதெல்லாம் நிருபங்களெழுதி, எங்களுக்கும், எங்கள் க்ஷேமத்தைக்கோரும் மஹானுபாவர்களுக்கும், இன்பமளித்து வருவானென நம்புகிறோம். சர்வசக்தியோடிதசக்தாளாகியவங்களையிரங்கிக்கைதூக்கி யாதரிப்பாராக!

பெண்களுக்குக்கல்வி.

பெண்கள் தமது மடமையால் தமது சாமார்த்தியமும் வன்மையும் பாராட்டாமல் மிருகப்பிராயம் வசித்து ஆடவருக்கு அடிமையாகிபிரவர்த்திக்கின்றனர். இவ்வாறு அடிமைத்தொழில் புரியும் பெண்களை எப்பொழுதுஞ் சேர்ந்து வாழாநின்ற புருஷரும் அவ்வடிமைச்சுபாவமே தங்களுமடைந்து ஸ்வேச்சை ஸ்வதந்திரமாகிய கௌரவமிழந்து பரதந்திரராகிப் பிரவர்த்திக்கின்றனர். இவ்விஷயத்தை விவரித்துக்காட்ட முதலில் பெண்கள் ஆடவருக்கு அடிமையுண்டு பிரவர்த்திக்க வேண்டுமென்பது அவசியமாயாவது, சத்தியமாயாவது, இருக்கவில்லை என்பதையும்; இரண்டாவது அவ்விதமடிமைத்தன்மை பெண்களுக்காவது, புருஷருக்காவது, நன்மை பயக்காதென்பதையும்; மூன்றாவது இதனால், இருவரும் ஏகபாசத்தால் பந்தப்பட்டு, தமது கௌரவமிழந்து தமது நாட்டையும் பராதீனப்படுத்தி தமது சுதந்திரங்களையுமிழந்து பலதுன்பங்களுக் காளாகின்றனர் என்பதையும், முறையே உணர்த்த முயலுவோம்.

முதலாவது. பெண்கள் புருஷரின்பொருட்டாகவேபடைக்கப்பட்டனென்றும், அப்புருஷருக் குட்பட்டுநடந்து அவர்களைச் சந்தோஷிக்கச்செய்வதே பெண்களுக்குப் பெருங்கடமையென்றும், பலதேசத்தார்களும் வற்புருத்திச் சொல்வதுமன்றி, அவ்வாறே காரியங்களும் நடத்திவருவதால், இதற்கு வேறான கருத்துப் பலருக்கு அதிசயமாகத் தோன்றுவதுமன்றி அறியாமையாகவும் காணப்படலாம். ஆயினும் எமதுள்ளத்தைக்கரவாது வெளியிடுவதே எமது கடமையாதலால் இகழ்ச்சிக்களஞ்சாது எமது கருத்தை உணர்த்துவோம். எத்தேசத்திலும் பெண்கள் புருஷருக்குட்பட்டு ஸ்வாதீனமின்றி நடந்துவந்ததற்கு காரணம் யாதென விசாரிக்குமளவில் அவர்களுடையசாந்தத்தன்மையும் பலவீனமுமே காணமாகத் தோன்றுகின்றன. உலகத்திலுள்ள பல தேசசரித்திரத்தையும், இராஜரீதியையும் யோசித்துப்பார்த்தால், அங்கங்கே பலவான்களாகிய பிரஜைகள் பலவீனராகிய மற்றவர்களை ஜெயித்துக் கிழ்படியும்படிசெய்து ஆண்டுவந்தனர் என்றறியலாம். இதுநிற்க பெண்கள் புருஷர்களைப்பார்க்கிலும் சரீர வன்மையிலும் ஆண்மையிலும் தாழ்ந்தவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் ஆண்மையிற் சிறந்த ஆடவர் தமது வன்மையால் பெண்களை ஆண்டுவந்தனென்பதற்கு வேறு சாக்ஷியம்வேண்டுமோ? ஆயினும் பெண்கள் எப்பொழுதும் அடிமைப்பட்டு வாழ்ந்தமையால் அதுவே அவர்களுக்குத் தகுந்த நிலைமை. அந்த ஸ்திதியில்தானே அவர்கள் எப்பொழுதும் இருத்தப்பட வேண்டுமென்று பலரும் வற்புருத்திச்சொல்வதால், இதன் பிசகை யுணர்த்த இரண்டொரு உதாரணங்களைக் காட்டுவது அவசியமென்று கருதுகிறோம். சிலகாலத்துக்குமுன் ஆப்பிரிக்காவிலிருந்த நீக்ரோக்கள் என்னும் கருப்புமனிதரை ஐரோப்பியர் பிடித்து அடிமைகளாக்கி மிருகங்களைப்போல் தமக்கு ஊழியஞ் செய்யும்படி பலாத்காரஞ் செய்துவந்தனர். அப்பொழுது இந்த நீக்ரோக்கள் ஸ்வாதந்திரியத்துக்குத் தகுந்தவரல்லவென்றும், அடிமைப்பட்டிருப்பதே அவர்களுடைய சுபாவமென்றும், அனேக கல்விமான்களும் நம்பினார்கள். அன்றியும் இப்பொழுது இந்த நீக்ரோக்கள்ஸ்வாதந்திரியம்பெற்று நாகரிகமுற்றஐரோப்பியரைப்போலவே, தங்களுக்காவது பிறருக்காவது யாதொருதீங்கும் விளையாதவாழ்ந்திருக்கவில்லையோ? ரஷியாதேசத்தில் செர்பஸ் என்று சொல்லப்படுகிற உழவுத்தொழில்செய்யும் ஒரு ஜாதியார் ஸ்வதந்திரம்பெற்று மற்ற உயர்ந்தஜாதியைப்போல் கௌரவமடையத்தகாதவர்களென்று இவர்களை அடிமைகளைப்போலவே நடத்திவருகின்றனர். அன்றியும் அடுத்ததேசங்களிலிருந்தசெர்பஸ்கள் இப்பொழுது சுவாதீனம்பெற்று தங்களுக்கும் தங்களைப்பார்க்கிலும் உயர்ந்தசாதியொன்று நம்பப்பட்ட மற்றவர்களுக்கும் வித்தியாசமில்லையென்பதை தமது செய்கையா லுணர்த்துகின்றனர். இவ்வாறு அசாத்தியமென்று கருதப்பட்ட பல காரியங்களும் சாத்தியமாக முடிந்தன. அதுபோலவே பெண்கள் சுவாதீனம்பெற்று வாழலாமென்பது அதிசயமாகத்தோன்றினும் நாளாவட்டத்தில் இது அனுபவத்தால் செம்மையாக விளங்குமென்பதை யாங்கள் சந்தேகிக்கவேண்டியதில்லை.

எந்தநியாயத்தால்பெண்கள்புருஷர்நிமித்தமாகசிருஷ்டிக்கப்பட்டனென்று சொல்லலாமோ. அதேநியாயத்தால்புருஷர் பெண்கள்நிமித்தமாகப்படைக்கப்பட்டனென்றுஸ்

பிக்கலாம். புருஷரில்லாமல் பெண்களுக்கு வாழ்வு கிடையாதெனில், பெண்களில்லாமல் புருஷருக்கு வாழ்வுண்டோ? சம்சார பாரத்தைச் சமக்க இருவருஞ் சமமாக பாத்தியப்பட்டிருக்க ஒருவர்மாத்திரம் ஸர்வ சுதந்திரமு மிழந்து அடிமைப்பட்டிருத்தல் தர்மமாகுமோ? மேலும் பெண்களுடைய ஆத்மாவையும், அறிவையும், அந்தக்கரணங்களையும் யோசிக்கையில், பெண்களுக்கும் புருஷர்களுக்கும் யாதொரு வித்தியாசமுள்ளதாகக்காணப்படவில்லை. ஆயினும் இத்தேசத்திலும், இதர தேசத்திலும், அனேகர் புருஷருக்கும், பெண்களுக்கும், அந்தக்கரணபேதமுண்டென்று சாதிக்கிறார்கள். மகம்மதியர் பெண்களுக்கு ஆத்மாவே யில்லையென்பார்கள். பிராம்மணர், பிந்தி சூத்திரர்கள் வேதங்களை வாசிக்கத் தகுந்தவர்களல்லவென்று நம்புவார்கள். அன்றியும் அனேக ஸ்திரீசூத்திரர்கள் வேதார்த்தங்களை அறிந்து மோக்ஷம்பெற்றதாக நமது பூர்வீக சரித்திரங்களாலறிகிறோம். மேலும் லீலாவதி, பானுமதி, காளிதாசன் மனைவி முதலிய பல பெண்கள் சகலசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தார்கள். யஜுர்வேதத்தைச்சேர்ந்த பிரஹதாரண்ணியகோபநிஷத்தில் யக்ஞியவல்கியர் தனது பத்தினியாகிய மைத்திரேயிக்கு மஹா அருமையாகிய பிரம்மக்யானத்தை போதித்ததாகவும், இப்பெருமாட்டி அதையுணர்ந்து மோக்ஷ மடைந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுவன்றி அந்நியதேசங்களில் அனேக பெண்கள் கற்று அதிக சாமர்த்திய முடையவராகின்றனர் என்பது எல்லாருக்குந்தெரியுமே. ஆதலால் பெண்கள் புருஷரைப்பார்க்கிலும் அறிவில் தாழ்ந்தவர்களன்று. பெண்களுக்கும மனதிருடமில்லையென்று சிலர் சொல்லுகின்றனர். ஆயினுமிது பிசகு. மரணமென்னும் வார்த்தையைக்கேட்கவே மனிதர் நடுக்க முறுகின்ற இந்நாட்டில் பெண்கள் உயிருடன் தமது புருஷருடன் உடன்கட்டையேறத்துணிந்தது லோகப்பிரசித்தமா யிருக்கையில், பெண்களுக்கு தைரமில்லையென்று சொல்லலாமோ? புருஷரைப்பார்க்கிலும், பெண்கள் அதிக காமிகளெனச் சிலர் கூறுவார்கள். இதுபிசகென்பதற்கு நமது தேசத்து வழக்கமே சாக்ஷியம். இந்நாட்டில் ஒரு புருஷன் அநேகம் பெண்களை விவாகஞ் செய்துக்கொண்டும், திருப்தியடையாமல் வேசிகளைத் தேடுகின்றனர். ஒருபுருஷனை மணம்புரிந்தபெண்ணை அப்புருஷன் இறந்தபின்பும் வேறுபுருஷனை இச்சியாமல் தனது கற்பைக்காக்கின்றனள். இதுவன்றி சாந்தமும், பொறுமையும், விசுவாசமும் மற்றும் பல சத்குணங்கள் பெண்களிடத்து அமைந்திருக்கின்றனவென்பதை அடியிற்கண்ட சங்கதிகளாலறியலாம். ஒருவீட்டில் கொள்ளப்படுகிற பெண் அவ்வீட்டில் அடுமைபோல் எல்லாப்பணிவிடையும் செய்கின்றனள். அதிகாலையில் எழுந்து சாணம் போடல், சட்டிப்பானைக்கழுவல், வீடுவாசல் பெருக்கல், சலங்கொண்டுவரல், சமைத்தல், மாமன், மாமி, மைத்துனர்கள், மற்றுமுள்ள பெருங்கூட்டத்துக்கு இரவும் பகலும் சமைத்துப்போட்டுத் திருப்திசெய்யல், முதலிய பல வேலைகள் செய்தும், ஏதாவதொரு காரியத்தில் பிசகினால், புருஷன், மாமன், மாமி, மைத்துனன் முதலியவர்களால் அடையுங் கொடிய தண்டனை சகிக்கக் கூடாததாயினும், அதையெல்லாம் பொறுத்து தன்புருஷனை வெறுக்காமல் அன்போடு வர்த்திக்கின்றனளல்லவா? ஆதலால் சகலவிதத்திலும் பெண்கள் புருஷரைப்பார்க்கிலும் தாழ்ந்தவர்களன்று என்பது விசிதமாகின்றது. அவர்களை அடுமைகளாக்குவதற்கு யாதொரு காரணமும் காணப்படவில்லை.

இரண்டாவது, என்றாலும் அவர்களை அடுமைப்படுத்துவதினால் நமக்காவது அவர்களுக்காவது பயனுண்டாகிறதோ வென்பதைச்சற்றுவிசாரிப்போம். இவ்வடுமைத்தன்மையால் பெண்களுக்கு யாதொரு நன்மையு முண்டாகிறதில்லை யென்பதை முன்பேகாட்டினோம். இதனால் அவர்களுடைய கற்பு காக்கப்படுகிறதென்று சிலர் எண்ணுவார்கள். ஆயினும் சிறைகாப்பின் நிஷ்பிரயோஜனத்தை முன்பே காட்டியிருப்பதால் மீண்டு மிவ்விடத்து அதைப்பற்றி பிரஸ்தாபிக்கவேண்டியதில்லை. மற்று இவ்வடுமைத் தன்மையால் பெண்களுக்கு விளையாநின்ற தீங்குகளைமாத்திரஞ் சற்றே யோசிப்போம். இவைகள் அநந்தமாயிருப்பினும், இவைகளுள் முக்கியமான சிலவற்றை மாத்திரம் கூறுவோம். அற்பதப்பிதங்களுக்கெல்லாம் புருஷர் விதிக்கின்ற கொடிய தண்டனையும், புருஷன், மாதா, பிதா, சகோதரர்களாலுண்டாகும் கொடுமைகளும், எல்லாருக்கும் தெரிந்தேயிருக்கின்றன. நாம் சம்பளங்கொடுத்து வைத்துக்கொள்ளும் வேலைக்காரனைத் திட்டவும் அடிக்கவுங் கூடாதென்பதை யாவரும் அறிவார். அன்றியும் நமது தன்பங்களை நீக்கி, நமது இன்பங்களை பெருக்கும் நமது வாழ்க்கைத்துணைநலமாக வாய்க்கும் பெண்களை யாதொருகாரணமில்லாமலும் கைகூசாமல் அடி

க்கும் சண்டாளரை நமக்குள் எத்தனையெ யரைக் காணலாம். இவ்வித சண்டாளத் தொழில் புரிவோர் பெண்கள் தமக்குடமை ப்பட்டவர்களென்றும். அவர்களே தங்களி ஷ்டப்படி நடத்தலாமென்றும், நினைக்கிறு ர்கள். ஆயினும் நமது தருமசாஸ்திரப்படி இவ்வதிகாரம் புருஷருக்கில்லை என்பதை அடியில்வரும் மனு முதலிய ஸ்மிருதிகளால் விசிதப்படும். தருமலாஸ்திரம் க-வது அ த்தியாயம், நகO-வது சுலோகத்தில், "த ண்டிக்கத்தகுந்த பிழைசெய்த மனைவியை ஒரு சிறு பெரம்புக்குச்சியைக்கொண்டாவ து கயிற்றைக்கொண்டாவது முதுகில்மாத் திரம் அடிக்கலாமேயொழிய மற்றெதைக் கொண்டாவது வேறஸ்தலங்களிலாவது அ டிக்கக்கூடாது" என்றிருக்கிறது. என்றூலும் மனுவுக்குச்சமானமாகிய மற்றொருஸ்மிரு தியில் " நூறுபிழைகள் செய்த மனையாள னையும் ஒருபூவைக்கொண்டும் அடிக்கக்கூ டாதென" அழகாய் சொல்லப்பட்டிருக்கின் றது. (ஜெ-உ-வது உO கூ) நமது பெண்க ள் கற்றவர்களாயிருந்தால் ஸாஸ்திரத்துக் கும் நீயாயத்துக்கும் விரோதமான இந்த கொடுமைகள் நாளாவட்டத்தில் ஒருவாறு நீங்கிப் பெண்கள் மென்மேலும் விர்த்திய டைய ஹேது உண்டாகலாமே.

இதுநிற்க பெண்களைக்கற்பிக்காமல் சி றைபடுத்துவதினால் விளையுந் தீங்குகளில் மற்றொன்றுவது, அவர்களுக்கு விசேஷத ன சுதந்திரங்கொடாதுவறுமையால் வருந் தவிடுவதே எல்லாதேசத்தாருடைய பூர்வத ருமங்களிலேயும் பெண்களுக்குப் புருஷ ரோடுச் சமமான தனசுதந்திரமிலையென்று ம்; அவர்கள்தமதுசொந்தமுயற்சியாலடையு ம்பொருளும் புருஷருக்கே சேரவேண்டுமெ ன்றும், சொல்லப்பட்டிருக்கின்றன. அங்கி லையேதேசத்து காமன்லாவென்னுஞ் சட்டப்ப டி, மனையாள் அளவற்றபொருள்கொண்டுவ ந்தாலும் புருஷன் அதையெல்லாங்கைப்பற் றிக்கொண்டு அவளுக்கொருகாசு கொடா மல் தனதிஷ்டப்படி செலவுசெய்து அவ ளைப் பிச்சையெடுக்கும்படி விடலாம். இத் தேசத்திலும், தகப்பன் அளவற்ற பொரு ள் விட்டுபோனாலும் அவன் குமாரர், தா யாருக்காவது, தங்கை தமக்கைமார்களுக் காவது ஒருகாசு கொடாமலே, எல்லாந்தா ங்களே பிரித்துக்கொள்ளலாம். இவ்விதபா ரபக்ஷமான விதிகளுக்குக் காரணம் யா தெனவிசாரிக்கப் புருஷருடைய வன்மையு ங் கொடுங்கோன்மையும், பெண்களுடைய மடமையும் பலஹீனமுந்தவிர வேறுகாணப் படவில்லை. ஆயினும் நம்மைப்பார்க்கிலும் நமது பெரியோர்கள் பெண்களிடத்து அதி க விசுவாசமும் பக்ஷமும் உடையவர்களா யிருந்தனர் என்பதை அடியில் வரும் ஸ்மி ருதிகளாலறியலாம். யாக்கியவல்கியர் "பி தாமரித்தபின்பு அவன் விட்டுப்போன பொ ருளை பாகித்துக்கொள்வதில் தாயாரும், கு மாரர்களோடு சமபாகம் பெற்றுக்கொள்ள ட்டும்." நாரதர் "புருஷன் இறந்தபின், ஒ வ்வொரு குமாரனுடைய பாகத்துக்குச் ச மமான பங்கைத் தாயாரும் பெறவேண்டு ம்." விஷ்ணு வென்னும் தரும சாஸ்திரி "குமாரர்களைப்போலவே, தாய்மார்களும் பாகங்க ளடையவேண்டும்." பிரஹஸ்பதி "அவன் (பிதா) இறந்தபின், குமாரர்களோ டு தாயாருஞ் சமபாகம் பெறவேண்டும். பிதாவின் பினதாரங்களும் அவ்வாறே சம பாகம் பெறவேண்டும். குமார்த்திகளோ குமாரர்கள் பங்கில் நான்கிலொரு பாகம் பெற வேண்டும்." விஷ்ணு "விவாகமில் லாத குமாரருடைய பங்குகளின் பரிமா ணப்படி ஏற்படுத்தப்படும்." இப்படிப்பட் ட ஸ்மிருதிகள் அநேகமுண்டு.

ஒரு புருஷன் இரண்டு மூன்று பெண்க ளை விவாகஞ் செய்துகொள்ளலும், இதனா ல் பெண்களுக் குண்டாகின்ற இடைவிடா ச்சரவும் துன்பமும் ஒருவரும் அறியாத னவன்று. என்றூலும் இக்கொடுங்கோன்மை யைப் பூர்த்தியா யுணர்த்துவது அசாத்திய ம். விசேஷ தனவான்களா யிருப்பவர்க ள், பத்து இருபது பெண்களை விவாகஞ்செ ய்து கொள்வதும் அபுருபமல்ல. ஒருவன் இரண்டு மூன்று பெண்களை விவாகஞ்செய் வதினால் தான் வருத்தப்படுவதுமன்றி, அ ப்பெண்களுக்கு அளவற்ற மனோவியாகூல த்தையும், நீங்கா சச்சரவையும் உண்டாக் கி துக்கசாகரத்தி லாழ்த்துகின்றனன். மே லும் புருஷன் பெரும்பாலும் அழகும், இ ளமையும் உள்ள பெண்ணை அதிகமாயிச்சி த்து மற்றவர்களை மதியாமல் அலக்ஷியஞ் செய்வதுமன்றி இவர்களைத் தூஷித்தும் அ டித்தும் வீட்டினின்று நீக்கியும் பலவித கொடிய இம்சைகளுக் குட்படுத்துவது அ புருபமல்ல. நமது சாஸ்திரங்கள் இரண் டுமூன்று பெண்களை விவாகஞ் செய்துகொ ள்ளலாமென உரைக்கின்றனவெனில், இச் சாத்திரங்களைக் கற்பித்தவர்கள் ஆடவர்க ளேயன்றி பெண்களல்லவென்பதே இதற் குச்சமாதானம். பெண்களுக்கு இயற்கை யான சுதந்திரமுண்டாயிருந்தால் இவ்வள வு இழிவாக நடத்தப்பட சம்மதியார் எ ன்பது நிச்சயம். அன்றியும் நமது சாஸ்தி ரங்களிலேயும் ஒருவன் தனது விபரீத போகத்தின் நிமித்தமாகவே பல பெண்க ளை விவாகஞ்செய்து கொள்ளலாமென்று

சொல்லப்படவில்லை. மறுதாரங் கொள்வதற்கு முதல் தாரத்தினிடத்து எட்டுத் தோஷங்களைக் காரணமாக யாக்கியவல்கியர் கூறியிருக்கின்றனர். அவையாவன;— க-குடி; உ-வது தீராநோய்; ங-வது வியபசாரம்; ச-வது மலடு; ஞ-வது ஆராதரித்தனம்; ஊ - வது இடையற்ற துற்பாஷை; எ-வது பெண்களையேபெறல்; அ-வது புருஷன்மீது துவேஷம். இதுவுமன்றி மனு ங-வது அத் - அஉ-வது சுலோகத்தில் "வியாதி யுள்ளவளாயினும் மனையாள் அன்பும் கற்புமுடையவளாயின், அவளை எப்பொழுதும் புருஷன் அவமானஞ் செய்யக்கூடாது. அவளிஷ்டப்பட்டால்மாத்திரமே வேறுவிவாகஞ்செய்துக்கொள்ளலாம்" இதைப்போன்ற சாஸ்திரங்களையுந் திரஸ்கரித்து நம்மவர் இருமனையாட்சி முதலிய கொடுமைகளைச் செய்துவருவது நமது பெண்களுடைய மடமையாலென்பதற்குச் சந்தேகமுண்டோ?

ஒரு புருஷன் பல பெண்களை ஏககாலத்தில மணம்புரிந்து போகித்துவர, பெண்களோ ஒரு புருஷனுக்குக் கட்டுண்டு, அவனிறந்தபின் அவனோடு உடன்கட்டையேறி, உயிருடன் வேகவேண்டிய கொடியவிதிப்பெற்றனர். இக்கொடுங்கொலை இக்காலத்தில் நீங்கிபோன போதிலும், புநர்விவாகஞ் செய்து கொள்ளலாகாதென்னுங் கொடுமை நீங்கவில்லை. இம்மாது பெண்கள் சற்றுவன்மையுடையவராகித் தமது சுதந்திரங்களை வலிய பெறுமளவும் முடியாதென்பதை ஸ்திரமாக நம்பலாம்.

நமது பெண்கள் சகிக்கும் துன்பங்களெல்லாவற்றினும் பெரிதாகிய மற்றொன்றிருக்கின்றது. அதாவது, விவாகம் என்னும் அழகிய நாமமுடைய கொடியவிற்பனையே. அநேகர் தமது புத்திரிகளை விலைக்கு விற்கின்றனர் என்பதற்குச் சந்தேகமில்லை. பிதாக்களும் குமாரர்களும், தங்களுடைய புத்திரிகளுக்கும் சோதரிகளுக்கும், தனங்கொடுப்பதைவிட்டு, இவர்களால் தமது செல்வத்தை விருத்திசெய்ய முயல்வது அபூர்வமல்ல. சற்றேனும் புத்திர வாத்சல்லியமாவது தயா தாக்ஷண்ணியமாவதில்லாத பிதாக்கள் தமது பெண்களைச் செல்வத்தின்பொருட்டு, அவர்களுடைய சுகதுக்கங்களை எவ்வளவும் பாராட்டாமல், பெண்டுமேல்பெண்டுகொள்போனுக்கும், கொயாளிகளுக்கும், குரூர சித்தர்களுக்கும், காமிகளுக்கும், தத்தஞ்செய்கின்றனர். இந்த துர்வழக்கம் நமது சாஸ்திரங்களால் கண்டிக்கப்பட்டிருக்கின்றது. மனு. ங-வது அத்தி. நு-வது சுலோகம். "தர்மத்தையறிந்த யாதொரு பிதாவும், தன் புத்திரியை விவாகஞ் செய்துகொடுப்பதற்கு, எவ்வளவு சிறிய தொகையும் உபகாரமாகப் பெறக்கூடாது. ஏனெனில் எவன் அதன் பொருட்டு பொருளாசையால் யாதொரு கொடையும் பெறுகின்றானை அவன் தன் பிள்ளைகளை விற்கிறவனாகின்றான்." மனு. ங-வது அத்தியாயம், ஙஅ-வது சுலோகம் "ஸ்த்ரீதனத்தைச் சேர்ந்தவனும் தன்மகளைக்கல்லியாணஞ்செய்துகொடுக்கிறநிமித்தம் யாதொருவெகுமதியும் பெறக்கூடாது. ஏனெனில் அச்சமயத்தில் காசு வாங்கும் பிதா, தன் மகளை விற்பவனாகிறான்." கசியபர் "பொருளாசையால்ஏவப்பட்டுதமது சொந்த புத்திரிகளை வெகுமதியின் பொருட்டு மணஞ்செய்து கொடுக்கிற பிதாக்கள் தங்கள் குழந்தைகளை, விற்கும் மகாபாவப்பிரதிபிம்பங்கள், மகா கொடியஅநீதஞ் செய்பவர்கள்." இதைப்போன்ற பல சுதந்திரங்கள் நமது பெண்களுக்கு சாஸ்திரோக்தமாயுண்டாயிருந்தும், தமது மடமையால் அச்சுதந்திரங்களெல்லாமிழந்து புருஷருக்கு அடிமைப்பட்டு அவர்களுடைய கொடுங்கோன்மையால் அளவற்றதுன்பங்களை அடைகின்றனர்.

பெண்களுக்கு இவ்வளவு துக்ககரமானமடமையாலும் அதன்காரியமாகிய அடிமைத்தன்மையாலும் புருஷருக்காவது நன்மையுண்டாகிறதோவென்பதை இனி யோசிக்கவேண்டும். நாம் இவ்விடத்தோடு வளர்க்கும் ஒருநாய்க்குட்டி அல்லது மற்றுமிருகத்தைப்பார்க்கிலும் நம்மைப்போலறிவுள்ள மனிதசங்கத்தை விசேஷமாக விரும்பி அச்சங்கத்தினால் அதிக இன்பமடைகிறோம். மேலும் நமக்கு தொண்டுபட்டு ஊழியஞ்செய்யப்பட்ட வேலைக்காரனுடைய சங்கத்தைப் பார்க்கிலும் நமக்குச் சமானமாகிய நேகிதசங்கத்தால் அதிக சந்தோஷமடைகிறோம். பிறர் தமக்கு பயப்படும்படி வன்மைசெலுத்துவதினால் அநேகர் சந்தோஷமடைந்தபோதிலும், இம்மாது கேவலம் தாழ்ந்தோர்மீது செலுத்தும் வன்மையாலுண்டாகிறதில்லை. நமக்குச்சமமானவர்களை ஜயித்து நமதாண்மைக் குட்படுத்துவதினால் நமக்கு சந்தோஷமுண்டாகிறதேயொழிய, நமக்குச் சமானமற்று, வன்மையற்று, ஏழ்மையான ஸ்திதியிலிருப்பவரை பயப்படுத்துவதினால்நமக்குச்சந்தோஷமுண்டாகுமோ? நமதுவசமதுவைக்கப்பட்டாதரியையும், நமதுவசமைக்கஞ்சாதபுலியையும், வேட்டையாடரசர்முதலியோர்விரும்பினும், ஒருபாவமறியாத ஆட்டுக்குட்டிகளை வேட்டையாடி சந்தோஷமடைந்த [illegible]யசாலிகளை

கேட்டதுண்டோ! இதனாலன்றோ பெரும் பாலுந் தமக்குச் சமானமாக்காணுத அரசாப்பார்க்கிலும், அவன் குடிகள் அதிகசந் தோஷமனுபவிக்கின்றனரென உலகமுவழங்குதல். ஆதலால் நமது பெண்களுடைய கௌரவத்தைத் தாழ்த்தி அடிமைப்படுத்துந்தோறும், அவர்களே நமது சங்கத்துச்சும் சந்தோஷத்திற்கும் எலாதனராக்குகின்றோரும். நமதுபெண்கள் இவ்வாறு தாழ்ச்சியடைவதினாலேயே புருஷர்கள் அவர்களே மதியாமலும் அவர்களிடத்து விருப்பமற்றும் துச்சாரிகளாய்ப் பிரவர்த்திக்கின்றனர்.

மேலும் பயத்தினாலடையும்பயனைப்பார்க்கிலும் நயத்தினாலடையும்பயன் விசேஷமென யாவரும்அபிமதிக்கின்றனர். ஆதலால்பெண்களே அடிமைகளாக்கிபயமுறுத்துவதினால் அவர்களுக்குப்புருஷர்மீதுள்ள அன்பும் நேயமுங் குறைந்து, கட்டாயமாக வேலைசெய்வார்களேயன்றி மனப்பூர்த்தியாக அன்பு கூர்ந்து உபசரிக்கமாட்டார்கள். என்றாலும் எல்லா ஸ்திரீகளும் இப்படிப்பட்டவர்களென்று சொல்லக்கூடாது. புருஷன் எவ்வளவு கொடிய மிருகமாயிருந்தபோதிலும் அவன் செய்யுங் கொடுமைகளே எல்லாம் ஒரு பெருமூச்சின்றிச்சகித்து அன்பிற் குன்றாது உபசரிக்குந் தெய்வத்தன்மையுள்ள பெண்கள் அனேகருண்டு. இந்ததெய்வீகத்தன்மை அவர்களிடத்து சுபாவத்திலுண்டாயிருப்பதேயன்றி, இது புருஷர்வன்மை பயத்தினாலுண்டாகிறதல்ல. இவ்வழகிய தன்மையுடையவர்களே கேவலம் மிருகங்களாகப் பாவித்து மூக்கணாங்கயிற்றால் பிடித்திழுத்து தமதிஷ்டப்படி செலுத்துங் கொடிய பாவிகளே என்னவென்று சொல்லலாம். ஐயோ! இப்பாவிகளல்லவோஉண்மையானமிருகங்கள். இச்சண்டாளருக்குமெல்லிய பெண்கள்மீது சர்வாதிகாரம் உண்டாகத்தக்கதோ. சுகந்தமும் அழகும் நிரம்பிய மெல்லிய புஷ்பத்தைக் குரங்கினகையிற் கொடுத்தாலதைத்தரையில்போட்டுக்காலால்தேய்க்குமேயொழிய சிரசில் தரிக்குமோ. பெண்களது அழகியதன்மையையறிந்த ஐரோப்பியர் அவர்களேகௌரவப்படுத்தித்தாங்களுங் கௌரவமடைகின்றனர். அறிவற்ற காமோ அவர்களேப் பலவாறுவருத்தித் தொண்டுசெய்யும்படி நிர்ப்பந்திப்பதினால், நமது நீசத்துவத்தையும், சண்டாளத்தையும், வெளிப்படுத்தி அவமானமடைகிறோம்.

பெண்களே அடிமைப்படுத்துவதுமன்றி
ரும்பாலும் நமது புலன்களுக்கு விஷய
ய பல்வஸ்துக்களிலொன்றுகவே அவ
பாவித்துவருந்தும் சண்டாளரும் அ
நேகருண்டு. அறிவுள்ள ஆன்மாக்களேயுடைய பெண்களுந் தமதாத்ம உஜ்ஜீவனத்தின் பொருட்டு ஞானோபகரணங்களேத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதுச் சற்றுமியோசியாமல், அவர்களதுஅறிவைமழுங்கச்செய்து, மாமோகத்தையூட்டித், தமதுவசையற்ற கொடியகாமத்துக்கு விஷயமாக்கிச், சிற்றின்பத்தில் மூழ்கச்செய்தே, கல்லைக்கட்டிக்கொண்டு பாழுங்கிணற்றில் விழுந்தவர்போல் மடிந்துபோகும் மூடர்கள், தம்மால்விளையும் வினைகளின்பொருட்டுபெண்களே வீணாக தூஷிப்பதேனோ! பெண்களே மாய்கையென்றும், கால்விலங்கென்றும், ஜாலமென்றும், பாசகயிறென்றும், பலவாறு பிதற்றுகிறவர்கள். பெண்களது தன்மையை இபபடிக்கெடுத்தது புருஷர்களே என்பதை அறியார்களோ. பெண்கள் கற்றுணர்ந்து ஞானிகளாகிப் பிரவர்த்திப்பாராயின், மூடராகிய ஆடவர்களே இவ்வாறே நிந்தித்துத்தூறக்கமுயல்வார்களல்லவா! இப்படிக்கல்லாமல் ஸ்திபுரிருஷர்களிருவரும் அறிவைவிருத்திசெய்துஞானமடையமுயலுவாராயின்ஒருவரையொருவர் ஜாலமென்றுநினைத்து துவேஷிக்காமல் பரஸ்பர உபகாரிகளாகி அன்பும் நேயமும் மென்மேலும் பெருகிப்பரமசுகத்தை யடையலாமல்லவா? ஆதலால் இவ்வடிமைத்தன்மையால் பெண்களுக்காவது புருஷருக்காவது நன்மையுண்டாவதில்லே. மற்று பலதீங்குகளே விளைகின்றனவென்பது சத்தியம். மூன்றாவது, இதுநிற்க இவ் வடிமைத்தன்மையென்னும் ஏகபாசத்தால் ஸ்திரீபுருஷர்களிருவரும் பந்தப்பட்டு தமது கௌரவமிழந்து தமது நாட்டையும் பராதீனப்படுத்தி ஸ்வசுதந்திரங்களேயுமிழந்து பலதுன்பங்களுக்காளாகின்றனர். இதன் உண்மை மேற்சொல்லியவற்றாலேயே விளங்கக்கூடுமாயினும், இதையறிவது பலருக்குக் கடினமாயிருக்குமாதலால், இதை வாசிப்பவர்கள் அடியில்வருவதைக் கவனமாகப் பார்வையிடுவார்களெனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மனிதருடைய சுபாவத்தைச்சற்றுஆழமாகயோசிக்குங்கால் தம்மைப்போன்ற சுபாவமுடையவர்களே விரும்பிச்சேருவதும், தாம் யாருடன் சஹவாசம் செய்கின்றனரோ அவர்களுடைய தன்மையைக் கைக்கொள்வதும், பெரும்பாலும் உண்மையாகத் தோற்றுகிறது. கற்றோரை கற்றோரே இச்சிப்பார்கள்; மூடர்களே மூடர்களே இச்சிப்பார்கள்.

“நற்றாமரைக்கயத்தி னல்லன்னஞ்
சேர்ந்தாற்போற், கற்றாரைக்கற்

ருமோ காமுறுவர் - கற்பில்லா, மூர்க்கரை மூர்க்கர் முகப்பர், முதுகாட்டிற், காக்கை யுகக்கும் பிணம்".

இவ்வாறே அடிமைகளே அடிமைகளே இச்சிப்பார்களேயன்றி ஆண்மையுங் கௌரவமுடைய சுவதந்திரிகள் இச்சியாரல்லவா? உண்மையான ஆண்மையுஞ் சௌரியமுமுள்ளவர்கள் தம்மிலும் தாழ்ந்தவர்களே இம்விக்கிறதில்லே. பெருந்தன்மையற்ற சிற்மக்கள் அதிகாரம் பெறுவாராயின் அதை கொடுங்கோன்மை யோடு செலுத்தி, பலரைத் துன்பப்படுத்தி, எலும்பைக் கடித்துச் சந்தோஷிக்கும் நாயைப்போல் திருப்தியடைகின்றனர். ஆதலின் நாம் நமது பெண்களே அடிமைப்படுத்தி அகௌரவமாக நடத்துவதினுல் பிறதேசத்தார் நம்மைக்கீழ்மக்கள் எனவும், வீணென்றும், சுவாதீன தன்மையற்றவ ரென்றும் நிந்திக்கப்பெற்றோம்.

இதுவன்றி ஸ்வப்பிரயோசனத்தை நாடி நாம் பெண்களே அடிமைகளாக்கவே, இதனுலேயே நாம்சுவாதீனமிழந்து பராதீனராய் விட்டோம். பிறரைப்பொய்ச்சொல்லும்படியும், களவிடும்படியும், ஏவுவோன்பொய்யையும், களவையும் வெறுத்து உண்மைபாராட்டானல்லவா? பிறரிடத்து உண்மையும்யோக்கியதையும் மதியாதவன், தன்னிடத்து அவைகளேமதியான் என்பது சத்தியம். மதிபபதாக சிறிதுகாலம் நடித்தாலும் இது நீடித்திராது. அதுபோலவே சுவாதீனத்துவத்தைப் பிறரிடத்து மதியாதவன் தன் சுவாதீனத்தைக் காப்பாற்றிக்கொள்வது அருமை. பூர்வீக கிரீக் ரோமக சரித்திரங்களே இதற்குசாகூியாகும். தமதுசுஜாதியாருடைய சுவாதீனத்தை மாத்திரம் மதித்து அன்னியரை அடிமைகளாக்கி வந்த மேற்கண்ட தேசத்தார் கடையில் தங்களுடைய சுவாதீனத்தையும் இழந்து தங்களிலும் மிகத்தாழ்ந்த அந்நியதேசத்தாருக்கு அடிமைகளாகி நசித்துப்போனார்களே. இதற்கு இத்தேசத்தாரும் ஒரு சாகூியமே. அடிமைப்பெண்களோடு சர்வதாவாசஞ்செய்யும் நமக்குக் கௌரவமாகிய பெருந்தன்மையும் சுவாதீனத்துவமும் எப்படியுண்டாகும். குடியனேச் சேருவோன் பெரும்பாலும் குடியனவதுபோல, அடிமைகளேச்சேர்ந்து சந்தோஷித்துவாழும் நாமும் அடிமைகளாயி விட்டது ஆச்சரியமல்லவே. நாம் தைரிய சூன்னியாளாகி பராதீனப்பட்டுப் போவதற்கு முக்கியமானகாரணம் நமது பெண்களுடைய மடமையும் அடிமைத் தன்மையுமே என்பதற்குச் சந்தேகமில்லே. மடமையும் அடிமைத்தன்மையுமேபெண்களுக்குஅத்தியுசிதமான சத்குணங்களென்றும், ஆநேகநூல்கள் போதிக்கின்றன. இது சத்தியமென்று பெண்களும் வெகுகாலமாக நம்பிவிட்டார்கள். இவ்வித மூடாத்துமாக்களல்லவோ நம்மைப்பெற்று ஊட்டிவளர்க்குந் தாய்மார்கள். இவர்களுடைய அடிமைத்தன்மையன்றே நமது இயேமனதிற் படிந்து நம்மோடு வளர்ந்து நம்மை அன்னிய தேசத்தாருடைய ஆளுகைக் குட்படுத்தியது. மெலியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும் என்கிறபழிமொழியின்படி, நாம் பேதையராகிய நமதுபெண்களேவருத்தி அகௌரவப்படுத்தினதால், கடவுள் நமதுதேசகௌரவத்தை அழித்து நம்மைப் பல நூற்றாண்டும் அந்நியருடைய ஆதீனமாக்கிப் பல துன்பங்களே அனுபவிக்கும்படிச் செய்தனர். ஆதலின் நமது தேசம் பெருந்தன்மையுஞ் சுவாதீனத்துவமும் அற்று அகௌரவத்துக் காளாகியதற்கு நமது பெண்களுடைய மடமையே முக்கிய காரணமாயிருக்கின்றது.

பகவத்கீதை.

கூ - வது-அத்தியாயம்.

கிருஷ்ணன்சொல்.

க. ஒ பிரத்வீபுத்திரா! இந்த இரண்டு சுருதி மார்க்கங்களேயும் அறிந்தயோகி மோஹத்தை யடையான். ஆதலால் எப்பொழுதும் நீயோகத்தோடு கூடினவனுவாய்.

உ. வேதங்களிலேயும், யக்கியங்களிலேயும், தபத்திலும், தானத்திலும், எந்த புண்ணியபலன் உண்டாகிறதாகச் சொல்லப்படுகிறதோ அவையெல்லாம் அதிக்கிரமிக்கிறன். இதுவன்றி ஆதிகாரணமும் உத்தமஸ்தானமுமான பிரமத்தையடைகின்றன்.

ங. உதையானலறிந்து சம்ஸாரத்தினின்றும் மோகூ மடையக்கூடுமோ, அப்படிப்பட்ட மிகவும் விசேஷமான, அநுபவத்தோடுங்கூடிய இந்த ஞானத்தை அசூயாரகிதனுகிய நின்பொருட்டு செம்மையாகச் சொல்லுகிறேன்.

ச. உத்தமமும் பாவனமுமான இந்த பிரம்மக்கியானம் வித்தைகளிலெல்லாஞ் சிரேஷ்டமானது, இரகசியங்களில் சிரேஷ்டமான இரகசியம். பிரத்தியகூ சுகபோ

தமானது, (என்றுல் லகுவாய் அறியத் தக்கது) தர்மத்தோடுங்கூடியது, என்றுல் ஸ்மிருதிகளினின்றும் வித்தியாசப்பட்டதன்று.) அனுஷ்டிப்பதற்கு அதிசுலபமானது (என்றுல் அர்ச்சை கருமாதி மார்க்கங்களிலும் சுலபமானது) நாசமற்றது.

டு. ஹே! சத்குரு ஸம்ஹாரா! இந்த (பிராம்மியதர்ம்மமாகிய) ஆத்மக்கியானதர்மத்தை விச்வஸிக்கிறது புருஷர்கள் என்னே(பிரும்மத்தை) அடையாமல், மிருத்து ரூபமாகிய் சம்சாரமார்க்கத்தில்தானே (எப்பொழுதும்) தங்கியிருப்பார்கள்; என்றுல் மோகூமடையார்கள்).

சு. இந்திரியங்களுக்கு அகோசரஸ்வரூபனுகிய (என்றுல் ஆத்மஸ்வரூபனுகிய) என்னுல் இந்த ஜகத்து வியாபிக்கும்படி செய்யப்பட்டது. சமஸ்தப் பிராணிகளும் என்னிடத்தில் தங்குகின்றன; நானே அந்தபூதங்களிலே தங்கினவனன்று. (என்றுல் அந்தப்பிராணிகள்நானல்ல, என்பகுதியுமல்ல).

எ. பிரும்மாமுதல் ஸ்தாவராதிபூதங்கள் என்னிலேயே இருப்பவையல்ல. (என்றுல் என்னிலொருபகுதியல்ல.) (மற்று) சர்வேச்வரனுகிய என்னுடையமகிமையைப்பார்ப்பாயாக; என்னுடைய ஸ்வரூபம் பூதங்களை பரிக்கப்பட்டதாயும். பூதங்களை விர்த்தியடையச் செய்வதாயுமிருந்தாலும், அந்த பூதங்களிலிருப்பதல்ல. (என்றுல் அந்த பூதங்கள் என்பகுதியல்ல).

அ. எப்படி எங்கும் வியாபித்திருக்கும் மஹத்தானவாயுவு எப்பொழுதும் ஆகாசத்திலிருக்கிறதோ, அப்படியே சமஸ்தபூதங்களும் என்னிலிருப்பதாக அறிவாய். (என்றுல், ஆகாயமாகிய வெட்டவெளியின்றி வாயுவிருப்பது எப்படி அசாத்தியமோ, அப்படியே, பிர்ம்மத்தின் மகிமையாலன்றி பூதங்களிருப்பதசாத்தியம்).

கூ. ஹே! குந்திபுத்திரா! கல்பாந்தத்தில் சமஸ்தபிராணிகளும் என் சம்பந்தமாகிய மாய்கியை அடைகின்றன. (என்றுல் எனதிஷ்டப்படி சூன்னியமாய் விகிகின்றன.) மீண்டும்நான் கல்பாதியாகிய சிருஷ்டி காலத்தில் அந்த சர்வபூதங்களையும் மறுபடியும் ஸ்ருஜிக்கிறேன். (என்றுல் சூன்னியமாகிய மாய்கையினின்றும் பிரபஞ்சத்தை மறுபடியும் உண்டாக்குகிறேன்.)

கூ. ஸ்வகீயமாகிய மாய்கையை அவலம்பித்து அந்தமாய்கையின் வசமாகி அஸ்வதந்திரமாகுஞ் சமஸ்தபூத சமூஹத்தையும் மீண்டும் மீண்டும் ஸ்ருஜிக்கிறேன் (என்றுல் சர்வசூன்னியத்திலுலேயே, பரவசமாகி ஸர்வசூன்னியமாகுத்தக்க இந்தப்பிரபஞ்சத்தை மீண்டும் மீண்டும் சிருஷ்டிக்கிறேன்.)

கக. ஓதனஞ்சயனே! அந்தகர்மங்கள் அக்கருமங்களில் அபிமானமில்லாதவும் உபேகூகளைப்போலவே இருக்கும்; பந்திக்கமாட்டா.

கூ. ஓகுந்தீபுத்திரா! சாகூமாத்திரமாக வீற்றிருக்கும் என்றுல், (சுத்தசூன்னியமாகிய)மாய்கையானது ஸ்தாவரஜங்கமங்களோடுங்கூடிய பிரபஞ்சத்தைஉண்டாக்குகிறது. இந்தசாகூித்வ நிமித்தத்திலுலேயே பிரபஞ்சம் வர்த்திக்கின்றது. (என்றுல் சாகூியாகமாத்திரம்வீற்றிருக்கும்பிரம்மம் திருவுள்ளம் பற்றுவதிலுலேயேசுத்தசூன்னியத்தினின்றும்பிரபஞ்சம்மாயாவிகாரமாகத் தோன்றுவதிலுல், சாகூியாகிய அந்த பிரம்ம மேஜகத்துக்குக்காரணம். ஜகத்து அந்தப் பிரம்மமல்ல.)

கஞ. பிராணிநியாமகமான (என்றுல்) சிருஷ்டிகர்த்திருத்தவமுடைய, பரமான என்னுடைய ஸ்வரூபத்தை அறியாத மூடர்கள் என்னை (பிரம்மத்தை) மனுஷ்யதேகத்தை விரும்பினவுக எண்ணி, அவமதிக்கின்றனர். (என்றுல் சாகூாத்கரித்ததிலுலேயே பிரபஞ்சத்தைப் படைத்த பிரம்மத்தின்மகிமை அறியாத மூடர்கள்) மனுஷ்யாதி ஸ்தூல தேகத்தோடு உலகத்தில் ஜனிக்கிறதாக நம்புகின்றனர். அதற்கோ எ - வது. அத்தியாயம், உச, உரு, சுலோகங்கள் சொன்னபடி, புலப்படுகிற சரீரமுமில்லை, ஜன்ம முமில்லை, மரணமுமில்லை).

கச. (ஏனெனில்) வீணுசையுடையவராகி (என்றுல் நிலையாத ஸ்வர்க்காநுபவத்தை விரும்பி) வீண்கர்மங்களைச் செய்தவராகி (என்றுல் நிஷ்பலமான யாகாதிகளைச் செய்தவராகி) உபயோகமற்ற ஞானமுடையவராகிய (என்றுல் உண்மையறிந்தும், மேற்சொன்ன வியர்த்த கருமங்களைச்செய்யும்) மூடர்கள் ஹிம்ஸாரூபமானவும், காமதர்ப்பாதி பலஹூளமானவும்,மோஹிக்கச்செய்யும்படியானவும் பிரகிருதியாகிய ஸ்தூலத்தை விரும்புகிறபடியிலுலேதான் (என்றுல், மூடர்கள் துன்பத்துக்கும், காமாதிகளுக்கும், அஞ்ஞானத்துக்கும் ஹேதுவாகிய சரீரங்களை விரும்புவதால், நிஷ்களங்கமாகிய பிரம்மத்துக்கு, களங்கமுள்ள அவதாராதி பலதேகங்களை ஆரோபிக்கின்றனர்.)

கடு. ஹே பிருத்வீபுத்திரா! மஹாத்மா

க்களோ, தெய்வீகமான (ஆத்ம)ஸ்வரூபத்தை இச்சித்தவர்களாகி, பூதகாரணமாகியவும், நாசரகிதமானவும் என்னை(பரமாத்மாவை) அறிந்து இதரசிந்தையில்லாமல் பஜிக்கின்றனர்.

கசு. ஜெயிக்கப்பட்ட இந்திரியங்களோடு,திருடசித்தியென்னும்விருதம் பூண்டவர்கள் நித்திய சமாதிசிந்தையாலே என்னை (பிரம்மத்தை) நிரந்தரமாக ஸ்மரித்து, பக்தியால்நமஸ்கரித்து உபாசிக்கின்றனர்.

கள. பின்னுஞ் சிலர் ஞானமென்னும் யக்கியத்தினால், என்னை (பிரம்மத்தை) ஒருவனேஎன்கிற ஏகஸ்வரூபத்தினாலேயும், பஹுவிதமாக எங்கும் முகமுடைய (என்றால் எங்கும்வியாபித்தசர்வக்கியத்துவமாகிய) வேறுபாவத்தினாலேயும் உபாசிக்கின்றனர், (என்றால்பிரும்மம் ஒன்றுயிருந்தும் ஸர்வக்கியத்துவத்தாலும், ஸர்வவியாபகத்தாலும், எங்கும் வெவ்வாறாக உள்ளதெனவறிந்து உபாசிக்கின்றனர்)

கஅ. ஜியோதிஷ்டோமாதிகங்களும் நானை. யக்கியமும்நானை. ஔஷதிவிகாரமாகிய பூண்டுகளும்நானை. மந்திரமும்நானை. ஆஜ்ஜியாதிஹவிஸ்ஸு (வெண்ணெயு)ம்நானை. அக்கினியும்நானை. ஹோமமும்நானை. (என்றால் பிரம்மவேதிகளுக்கு எல்லாம் பிரம்மமே. இதைவிட அவர்களுக்கு வேறு உபாசனையில்லை.)

கக. இந்தஜகத்துக்குப் பிதாவும்நானை. மாதாவும் நானை. பரிக்கிறவனும் நானை. பரபிதாமகனும் நானை. அறியத்தக்கவேதார்த்தமும் நானை. பாவனவஸ்துவும் நானை (என்றால் யோகாதி தியானங்கள்) ஓங்காரமும் நானை. ருக்சாமயெஜுர்வேதமும்நானை. (என்றால் பிரம்மவேத்திகளுக்குஎல்லாம் அந்தப் பிரம்மமே யொழிய வேறில்லை.

உ0. (பிரபஞ்சத்தின்)மார்க்கமும்(மோக்ஷகதி) போஷனும், ஸ்வாமியும், சாக்ஷியும், இருப்பிடமும், அடைக்கலஸ்தானமும், சிநேகிதனும், உத்பத்தி ஸ்திதி லயகாரணமும், நிக்ஷேபமும், நாசமற்ற வித்தும் நானை.

உக. ஹே அர்ஜுனா! நான் (உலகத்துக்கு) வெப்பங் கொடுக்கிறேன். வருஷம் பெய்விக்கிறவனும் நானை. தடுக்கிறவனும் நானை. அமுதமும் நானை, மிருத்துவும் நானை, ஸ்தூலமும் நானை, சூக்ஷமும் நானை. (என அறிந்தோர் எங்கும் வியாபித்த ஸர்வக்கியமுகிய என்னையே உபாசிப்பார்களே யன்றி வேறொன்றையும் உபாசியார். என்று - கரு - வது சுலோகத்தோடு அன்வயம்.)

உஉ. மூன்று வேதங்களை அறிந்த எவர்கள் சோமபானஞ் செய்தவராகி பவித்திரபாவமுடையவராகி, யக்கியத்தினால் என்னை பூசிக்கிறார்களோ, அவர்கள், பவித்திரமான தெய்வலோகமடைந்து ஸ்வர்க்கத்தில் திவ்வியபோகங்களை அநுபவிக்கின்றனர்.

உங. அவர்கள் விஸ்தாரமான அந்தஸ்வர்க்க லோகத்தை அநுபவித்து புண்ணியம் க்ஷீணித்துப்போகவே மீண்டும் மனுஷிய லோகத்தை அடைகின்றனர். இவ்விதமாகமேற்சொன்ன வேதகர்மங்களை ஆசரிக்கும் விஷயகாமிகள் போக்குவரவை அடைகின்றனர்.

உச. அந்நியராகிய (ஞானோபாசகளாகிய) எவர்கள் என்னை (பிரம்மத்தை) தியான ரூபமாக உபாசிக்கிறார்களோ அந்த நித்திய சமரகிதசித்தமுடைய அவர்களை நானேயாகக்ஷேமம் அடைவிக்கிறேன்.

உடு, ஹே குந்திபுத்திரா! எவர்கள் அந்நிய தேவதாபக்தர்களாகி, சிரத்தையோடு கூடிபூஜிக்கிறார்களோ, அவர்களும் என்னையே (பிரம்மத்தையே) பூஜிக்கிறார்கள். ஆனால் கிரமமான மோக்ஷமார்க்கத்திலல்ல. என்றால் சகல தேவதைகளும் பிரம்மத்தின் குணபாவங்களாயிருப்பதால், சகலதேவதா உபாசனையும் பிரம்மத்தையே சேரும். ஆனாலும் அது அஞ்ஞானத்தோடுங்கூடிய உபாசனையாதலால் மோக்ஷத்தைச்கொடாது.

உசு. ஏனெனில், எல்லா உபாசனைக்கும் கர்த்தனும் அங்கிகரிப்போனும் நானேயிருக்க, என்னை (பிரம்மத்தை) அறியாமையினால அவர்கள் (மேற்கண்ட அந்நியதேவதா உபாசிகள்) மதி தாளாகின்றனர்.

உஎ. தேவநியமமுள்ளவர்கள் தேவர்களை அடைகின்றனர். பித்துரு விருதமுள்ளவர்கள் பித்ருக்களை அடைகின்றனர். (விஜயகாதி) பிசாசங்களைத் தொழுவோர் அப்பிசாசங்களையே அடைகின்றனர். என்னையே (பிரம்மத்தை) பூஜிப்பவர்கள் என்னையே (பிரம்மத்தையே) அடைகின்றனர்.

உஅ. எவன்பக்தியினால் என்(பிரம்மத்தின்) பொருட்டு இலையாவது, புஷ்பமாவது, பலமாவது கொடுக்கின்றானை, நான்பக்தியோடுங்கூடிய அவனது பக்தி பூர்வகமாக சமர்ப்பிக்கப்படுகிற அந்த பத்திராதிகளை சாப்பிடுகிறேன். (என்றால்) பிரம்மத்தை அறிந்தவன் பக்தியுடன் எவ்வளவு அற்பவஸ்துவை சமர்ப்பித்தாலும் அது அங்கிகாரமாகும். பக்தி பிரதானமேயொழிய சமர்ப்பிக்கும்வஸ்து அவசியகம்.

உக. ஹேகுந்திபுத்திரா! எதைச்செய்கிறாயோ, எதைச்சாப்பிடுகிறாயோ, எதைச்சமர்ப்பிக்கிறாயோ, எதைபிறருக்குக்கொடுக்கிறாயோ. எதைத்தபசுசெய்கிறாயோ (என்றால் எல்லாசிந்தையும்) அவையெல்லாம்எனக்கே பிரம்மத்துக்கே)அற்புதமாகசெய்வாயாக. எ(என்றால் எந்தகாரியஞ்செய்தாலும் பிரம்மத்துக்கேற்றதாயும் பிரம்மசிந்தையோடுஞ் செய்வாயாக).

உ0. இவ்வாறு சகலத்தையும் பரப்பிரம்ம பிரீதியாகச்செய்யும் யோகத்தோடுங் கூடினவனாய் சுபாசுபங்களென்னும் கர்ம பந்தங்களால் விடப்பட்டு விமுக்தனாய்என்னை (பிரம்மத்தை) அடையக்கடவாய்.

உக. நான் (பிரம்மம்) சமஸ்த பிராணிகளிடத்தும் ஸமமானவன். எனக்கு சத்துருவும்இல்லை, இஷடனும்இல்லை. யாராலால் என்னை பஜிக்கிறார்களோ அவர்கள்பக்தியினால் என்னிடத்தில் பிரவர்த்திக்கின்றனர், நானும் அவர்களிடத்தில் வர்த்திக்கிறேன்.

உஉ. விசேஷ துராசாரமுடையவனானும் அந்நியதேவதாராதனஞ் செய்யாமல்என்னை பஜிப்பானாகில், அவனும்சதாசாரமுடையவனாகவே அறியப்படவேண்டும். ஏனென்றால் அவன்செம்மையாக மோகூத்தின்பொருட்டு முயல்பவனாதலினாலேதான் (என்றால், ஒருவன் மகா பாவியானாலும் பிரம்மத்தை யறிந்து தொழுவானாயின் அவன் பாவங்கள்நசித்து பாவனனாவான்)

உங. அந்த புருஷன்சிக்கிரத்தில் சன்மார்க்கத்தை விரும்பு வோனாகிறான். நித்தியமான உபசாந்தியடைகிறான். ஔந்திபுத்திரா! என்னுடைய பக்தன் நசிக்கிறதில்லைஎன்று பிரதிக்ஞையெய்வாயாக. ஸ்திரமாக நம்பு.

உச. ஹே புருத்வீபுத்திரா! எவர்கள்பாபிகளாயிருக்கிறார்களோ அவர்களும், பெண்களும் அவ்வாறே வைசிய சூத்திரர்களும் என்னைவணங்கி அத்தியுசிதமான பதவியை (மோகூத்தை) அடைவார்கள்.

உரு. பக்தர்களும் புண்ணியவான்களும் ஆகிய பிராம்மணர்களும் இராஜரிஷிகளும் அவ்வாறே சக்தியடைவார்களென்று சொல்லவேண்டுமோ. அநித்தியமானவும் அசுகமானவும் இந்த உலகத்தையடைந்தும் என்னைபஜிப்பாய்.

உசு. என்னிடத்தில் மனதுடையவனும் அவ்வாறே என்னுடைய பக்தனாகவும், என்னை பூஜிப்பவனாகவும் ஆவாய். என்னை நமஸ்கரிப்பாய்.இவ்விதமாக மனதை என்னிடத்துச்சேர்த்து என்னையே அடையக்கடவாய்.

ருக்குவேத சம்ஹிதை.

(தொடர்ச்சி)

ந-வது சூக்தம்.

[இதற்கு ருஷியும் பாவும் முன்போல, இதிலுள்ள பன்னிரண்டு ருக்குகளில் முதல்மூன்றிற்கு தேவதை அசுவின்கள்; மறுமூன்றிற்கு இந்திரன்; பின்மூன்றிற்கு விசுவதேவர்கள்; கடைசி மூன்றிற்கு சரசுவதி.]

வருக்கம், நு.

(க.) சுஷ்டிநாய ஜரீ-ஷ்டோ உர்வதாணி ஸ-ஹஸ்ரிணீ, வ-ர-ஹ-ஜா வநஸ்பதம்.

(வரிசுவாங்கும்பொருட்டு) நீட்டப்பட்டிருக்கிற கைகளை யுடையவர்களும், நற்செய்கைகளைப் போஷிக்கிறவர்களும், நீண்டபுஜங்களை யுடையவர்களுமாகிய * அசுவின்களே; † யாகத்திலான அன்னத்தை வாங்குங்கள்.

(உ) சுஷ்டிநாவ-ர-ஹம் லஹாந ராஸ வீரயாயியா, யிஷ்ணாவந்தம் திரஃ.

மிகுந்த சருமங்களை யுடையவர்களும், (வழிகாட்டிக்) கொண்டு போகிறவர்களும், மனத்திண்மை யுடையவர்களுமாகிய ‡ அசுவின்களே; (எங்களுடைய) ஸ்தோத்திரங்களை விரைவான § மனதுடன் ஏற்றுக்கொள்ளுங்கள்.

---

* 'புருபுஜா' 'மிகவுண்போர்' என்றுங்கொள்ளலாம்.

† அசுவின்கள் சூரியனுனவர் குதிரைவடிவத்தைக் கொண்டிருந்தபோது அவருக்குப்பிறந்த இரண்டு பிள்ளைகள். அவர்கள் நித்தியமான யௌவனமும் அழகும் பொருந்தியவர்கள். மேலும் தேவர்களுக்கு அவர்கள் வைத்தியர்கள்.

‡ 'திஷ்ணியா' புத்திமான்களென்றும் பொருளாகும்.

§ 'அன்புள்ள' வென்று தாத்பரியம்.

(ரு.) ஏஷ்ட யூவாகவம் வ்ருதா நா லாதூவ்ருஷ வஹிஷ்டம், க்ரயா தம் ரூஜ்ரவதக்நீ.

(சத்துருக்களைக்) கொல்லுகிறவர்களும், அசத்திய மில்லாதவர்களும், போர் வலைமுன்சென்றுநடத்துகிறவர்களுமாகிய * (அசுவின்களே); கலந்து † அபிஷவம் பண்ணப்பட்டிருக்கிற (ஸோமங்கள்)வர்களை வெட்டிநீக்கிய தர்ப்பையின் பேரில் இடப்பட்டிருக்கின்றன. (அவைகளாவாங்க) வாருங்கள்.

(சு.) இம்ரூயாஹி ஹித்ரூஹாதோ வ்ருதா உதேகாயவம், சுண்ஹீஹ்யந்தா வ்ருதாவம்.

விசித்திரமான ஒளியையுடைய இந்திரனே, வாரும்; (ருத்துவிக்குகளுடைய) விரலகளால் அபிஷுதமாயிருக்கிற, நித்தியம் சுத்தமான இவைகள் உம்மை இச்சித்துக் கொண்டிருக்கின்றன.

(டு.) இம்ரூயாஹியியெஷிதோ விவ்ரூஜதம் வ்ருதாவதம், உவவ்ரூஹ்வாணி வாயதம்.

இந்திரனே, புத்தியினாலே ‡ அடையப்பட்டிருக்கிறவரும், மேதாவிகளால § அடையப்பட்டிருக்கிற வருமாகிய, (நீர்) அபிஷுதமான ஸோமத்தையுடைய ருத்துவிக்கின் ஸ்தோத்திரங்களை நெருங்கும்.

(சு.) இம்ரூயாஹி தகுதஜா நு உவவ்ரூஹ்வாணி ஹரிவம், வ்ருதே யிஷ்டயஜுநம்.

குதிரை * களோடுகூடிய இந்திரனே தீவிரமுடைய நீர் (எங்கள்) ஸ்தோத்திரங்களை ஏற்கும்பொருட்டு வாரும், † ஸோமாபிஷவத்தோடு கூடிய (இந்தக்கருமத்) தில்எங்களுடைய (ஹவிஸாகிய) அன்னத்தைவாங்கும்.

வர்க்கம், சு.

(எ.) ஏஹவஜுஷுணீ யூதோவி ஷ்ணவாவ சூமத, ஆஜ்ராம்ஹோஷ்வ்ருதம்.

பாது காப்போரும், மனிதர்களைத் தாங்குவோரும், (பயனைக்) கொடுப்போருமாகிய விசுவதேவர்களே, (யஜமானருடைய ஹவிசு) கொடுக்கிறவனுடைய அபிஷுத(ஸோம)த்தினிடத்து வாருங்கள்.

(அ.) விஷ்ணவாவஹ்னி ரூவ்ருதாஸ் வ்ருதாமந்தக்ருணுயம். உவவ்ரூஹ்வாணி.

நீரைச் சீக்கிரத்தில் கொடுக்கிறவர்களாகிய ‡ விசுவதேவர்கள், பகலினிடத்திற்குச் சூரியகிரணங்கள் (வருவது) போல, அபிஷுதமான (ஸோமத்) தினிடத்து, விரைவுள்ளவர்களாய், வருக.

(கூ.) விஷ்ணவாவஹ்னிய ஸ்ரீவனஹிரோயாவஹ்னி ரூவ்ருதாஸ், ஸேயம் ஜுஷ்டவ்ருதம்.

அழிவில்லாதவர்களும், எங்கும் வியாபியான்ற புத்தியையுடையவர்க

---

* 'ருத்திரவர்த்தனி' ருத் = அழு, ருத்திர = "அழுகிற" இவ்விடத்தில், "அழச்செய்கிற" (சத்துருக்களை) அழச்செய்கிறவர்கள் சூரர் அச்சூரர்களுக்கு 'வர்த்தனி' மார்க்கம்.

† 'வஸதீவரீ' 'ஏகதஞ' என்னும்பெயர்களையுடைய இருவகையான, சில ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்ட, ஜலத்தை ஸோமத்துடன் சேர்ப்பது வழக்கம்.

‡ 'யஜமானனுடைய பச்தியினாலே' என்று உரைசெய்யப்பட்டிருக்கிறது.

§ 'அப்படியே ருத்துவிக்குகளினாலே' என்று.

* மூலத்தில் 'ஹரி' 'ஹரி' என்பது இந்திரனுக்குரிய இரண்டு குதிரைகளின் பெயர்.

† சகஜமான அர்த்தம் 'ஸ்தோத்திரங்களின் கிட்டேவாரும்' என்று ஆகும்.

‡ தகுதியான பருவங்களில் தவக்கமின்றி மழையைப்பொழிகிறவர்கள்.

ளும், துரோகமற்றவர்களும், (பொருளை க) கொண்டுவருகிறவர்களுமாகிய விசுவ தேவர்கள் நலவிளைவாங்கக்கடவது.

(க0.) வாவசூ நஃஸுவூதீவாஜெ ஹிவூஜி நீவதீ, யஜ்ஃவஷ்ட்ரு யியாவ ஸுஃ.

பரிசுத்தமாக்குகிறவளும், அன்னத் தினுலாகும் கிரியைகளை யுடையவளும், கருமத்திற்குப் பயனுகிய பொருளைக் கொடுக்கிறவளுமாகிய * சரசுவதியானவள் (நறவிசூரூபமான) அன்னத்தினிமித்தம் † எங்களுடையயாகத்தை இச்சிக்கக் கடவது.

(கக.) ஜொஷயி தீரஸு நூதா நாம் ஜெதம்தீஸுஃதீ நாம், யஜ்ஞயெ ஸுவூஸ்துதீ

இன்பமாகிய சத்திய வாக்கியங்க ளைப் பிரேரிக்கிறவளும், நற்புத்தியுடை யவர்களுக்கு அறிவு மூட்டுகிறவளுமாகி ய ‡ சரசுவதியானவள் யக்கியத்தை ஏற் றுக்கொண்டாள்.

(கஉ.) உஜ்ஹோசுணூஃஸுவூதீவ்ரு ஜெதயதி கேதூநா, யியொவிஷ்டவி ரூஜதி.

சரசுவதியானவள் (தனது) செய் கையினுல் பெரும்வெள்ளத்தைத் தோற் றுவிக்கிறுள் § (மேலும்தனது இயல்பா னரூபத்தால்) எல்லாப்புத்திகளையும் பிர காசிப்பிக்கிறுள்.

---

* யியாவஃ = கருமத்தினுல்அல்ல து புத்தியினுல் (அடையத்தக்க) பொருளை யுடையவன்.

† "(யஜமானனுக்குக்கொடுக்க) அன் னத்தோடு" என்றுங்கொள்ளலாம்.

‡ "அநுஷ்டானம் பண்ணுவோர்க்கு அவரவர் கடமைகளை ஞாபகப்படுத்துகின்ற வள்" என இதன்பொருளை உரையாசிரியர் விரித்துச்சொல்லுகிறார்.

§ சரசுவதிக்கு தேவதாரூபம் ஒன்று, நதிரூபம் ஒன்று. இவ்விரண்டில் முதல்ரூப ம் முன்னிரண்டு ருக்குகளில் சொலலப்பட் டிருக்கிறது. இதில் இரண்டாவது சொல் லப்படுகின்றது.

உ-வது அனுவாகம்.

சூக்தம், க. (ச.)

[ருஷியும், பாவும் முன்போல் தேவதை இந்திரன்]

வர்க்கம், எ.

(க.) வஸ்ரூவகூதூ உதயெ வஸுவாஹிவமொஹூஹெஜஸுவ ஸுவிஜ்ரூவிஜ்ரூவி.

நல்ல கறவைப்பசுவைக் கறக்கும் பொருட்டுக் (கூப்பிடுகிறது) போல அழ கானவற்றைச் செய்கிறவனே * (எங்க ளுடைய) ரக்ஷணத்திற்காக நாள்தோறு ம்கூப்பிடுகிறோம்.

(உ.) உவநஃஸவநாமாஹி ஸொ ஷவ ஸொஷவாஃவிவை, மொஹா ஜெவதொஜஃ.

ஸோமங்குடிப்பவரே, எங்களுடை ய ஸவனங்க † ளின் கிட்டேவாரும். (வந்து) ஸோமத்தைக்குடியும். தனவான கிய (வும்மூடைய) களிப்பு மாடுகொடுக் கத்தக்கதே. ‡

(ரு.) சுயாதெ அஜ ஶா நாம் விஜ்ரூ ஷ வஸுஉதீ நாம், ஶாதொ சுதிவ்ரு சூ முஹி.

இப்போ (நாங்கள்) நற்புத்தியுடை யவர்களாகிய, உமக்குமிகவும் சமீபமான வர்களின் (நடுவேநின்று) அறிகிறோம். நம்மைவிட்டு (ப்பிறருக்குச்) சொல்லா தேயும் § (நம்மிடத்திற்கே) வாரும்.

---

* அழகான செய்கைகளைச்செய்கிற இ ந்திரனே.

† ஸவனம் = ஸோமாபிஷவம். அ க்கினிஷ்டோமம் என்னும் யாகமானது "பி ராதஸ் ஸவனம்" "மாத்தியந்தின ஸவன ம்" "திருதியஸவனம்" என்னும் வெவ் வேறுன மூன்று பாகங்களை யுடையதாம்.

‡ 'நீர் களித்தீராஞல் மாடு கொடாம லிருக்கமாட்டீர்' என்று தாத்பரியம்.

§ 'உம்முடைய சுவரூபத்தை' என்று உரையாசிரியர் வருவித்துக்கொள்ளுகிறார்.

(ச.) வரூஹிவிஸ்ரஸ்ரூதசிம்ஸ்ரூம் வ்ருஹாவிவஸ்ரிதம், யவ்ஹஸ விஸ்ரு ரூவாஸ்ரு.

(ஓ யஜமானனே) * எவர் உம்மு டையமித்திரர்களுக்கு எங்கும் (பொருள், மக்கள் முதலாகிய) வரம்(கொடுக்கிறாரே) அப்படிப்பட்ட மேதாவியும், ஹிம்ஸையடையாதவருமாகிய இந்திரன்கிட்டேபோம். (போய்) வித்துவானை (ப்பற்றி)க்கேளும். †

(சு.) உதஸ்ரூவதரூநொநிஹொநிஸ்ரூதஸ்ரிஹாஸ்ரூத, ஏயாநாஜம்ஸ்ரூஜூஸ்ரூவம்.

இந்திரனிடத்தே உபாசனைசெய்கிறவர்களாகிய, எங்களுடைய (ருத்துவிக்குகள்) ஸ்துதிக்கட்டும். ‡ மேலும் ஓநிந்திப்பவர்களே! (இவ்விடத்தினின்றும்) மற்றிடங்களினின்றும்போய்விடுங்கள்.

வர்க்கம், அ.

(சு.) உதநஃஸரூஹமாகூரிவெஹாவெயரூஸுஸ்ரூஷ்யஃ, ஸ்ரூஹெஜிம்ஸ்ரூஸ்ரூஸுணி.

(பகைவர்களே) அழிக்கிறவரே! சத்துருக்களும் எங்களைச் செல்வனென்று சொல்லுக. (நமக்கு மித்திரர்களாகிய) மனிதர்கள் § (அப்படிச்சொலலுகிறார்களை னச்சொல்வானேன்,) (நாங்கள்) இந்திரனுடைய (பிரசாதத்தாலுண்டாகிற) சுகத்தில் இருப்போமாக.

(எ.) வனோஸரூரோஸரூவெ ஹரூயஜ்ஞஸ்ரியம் நரூரோஷநம், வதயந்யஸ்ரூயஸ்ரூவம்.

(யஜமானனே மூன்று ஸவனங்களிலும்) வியாபித்திருக்கின்றதும், யாகத்துக்குச் சம்பத்தாகவிருப்பதும், மனிதர்களைக் களிப்பிக்கின்றதும், கருமங்களை நிறைவேற்றுகின்றதும் * (யஜமானனைச்) சந்தோஷிப்பிக்கிறவராகிய (இந்திரனுக்குச்) சகாவாகியதுமான † இந்த (ஸோமத்தை யாகத்தில்) வியாபித்திருக்கிற (இந்திரனுக்குக்) கொடும்.

(அ.) கூஸ்ரூவீகூரூஸரூதகரூதொவ நொவரூதரூணாஸுஹவம், வ்ருஹாவொவாஜெஷரூவாஜிநம்.

மிகுதியானகருமங்களையுடையவரே ‡ இந்த (ஸோமத்தின் அம்சத்தைக்) குடித்து (நீர்) விருத்திரர்களின் § சங்காரகரானீர். (நீர்) உம்முடைய பக்தர்களாகிய படையாளர்களை யுத்தத்தில் மிகவும் பாதுகாக்கிறீர்.

(கூ.) தம்ஸ்ரூவாவா ஜெஷரூவாஜிநம் வாஜயாஸி ஸரூதகரூதொ, யநாநாஶம் ஊஸ்ரூஹாதயெ.

மிகுந்த கருமங்களுடையவரே யுத்தத்தில் வலியரான, அப்படிப்பட்ட

---

* இந்த ருக்கானது யஜமானனைப் பார்த்து ஹோதாவானவர் சொல்லுவதாம்.

† வித்துவானுகிய என்னைப்பற்றி "இந்த ஹோதா நன்றாய்த் துதித்தார்" வென்றுகேளும்.

‡ ஸ்ரூவரூ என்பதற்கு இந்த அர்த்தம்ஸரளமாகவிருக்கவில்லை. "இந்திரபக்தர்கள் 'நிந்தகர்களே ஓடிப்போங்கள்' என்று சொல்லுக" எனப்பொருள் செய்யலாம்.

§ கரூஷ்யஃ இதற்கு 'பிரஜைகள்' அல்லது 'வித்துவான்கள்' எனப்பொருளாம். இந்த ஒருமொழிக்கர்த்தம்பண்ண பாஷியக்காரர் மேலெழுதியிருக்கிறபடி பலவார்த்தைகளை வருவித்திருக்கிறார். ஆனால் அதை முதல் வாக்கியத்தில் 'சத்துருக்கள்' என்பதற்காவது 'கடைசிவாக்கியத்தில் 'நாம்' என்பதற்காவது விசேஷண மாக்கினால் இவ்வளவு வருத்தப்பட வேண்டியதில்லை.

* 'பதயத்' இதற்கு மேற்கூறிய பொருள் செய்வது, உணவின் உதவியின்றி, அசாதகியம். இதன் சாதாரணப் பொருள் 'விழச்செய்கின்றது' என்றாகும்.

† 'மந்தயத்ஸகம்' 'மந்தமாச்சுகின்றதும், மகிழ்ச்சிபொருந்தியதும், என்றும் பொருளாம்.

‡ 'சதக்ரதோ' சத = நாசு, கிரது = கருமம், அல்லது ஞானம். ஆதலால் "மிகுந்த அறிவுடையோரே" என்றும் கொள்ளலாம்.

§ விருத்திரன் என்னும் அசுரனைச் சேர்ந்த அசுரர்கள்.

* உம்மை, திரவியத்தை யடையும்பொருட்டு (நாங்கள்) அன்னமுடைய ராக்குகிறோம்.

(க०.) யொஸாயொவ நிஃஹாஸு வஃவாஸஃ வஃஸுதஃவஸுவா. தஸ்மா இஂத்ராயமாயத.

(ஓய்ருத்துவிக்குகளே) எவர்பொருளுடையவரோ, பெரியவரோ, நல்ல(சருமங்களை) நிறைவேற்றுகிறவரோ, அபிஷவம்பண்ணுகிறவருக்குச் †சகாவானவரோ, அப்பேர்ப்பட்ட இந்திரனுக்குப் பாடுங்கள்.

சூக்தம், உ. (நு.)

[பாவும், ருஷியும், தேவதையும், முன்போலவே]

வர்க்கம், கூ.

(க.) சூகெதாநிஷீஹதெஂத்ர ஸ ஹிவ்ரமாயத, வவாயஃ ஹொஃவாஹவஃ.

ஸ்தோத்திரங்களை ஏந்துகிற ‡ சிநேகிதர்களே, சிக்கிரமாய் வாருங்கள், வாருங்கள்; உட்காருங்கள்; உட்காந்து இந்திரனை மிகப்பாடுங்கள்.

(உ.) வஃரஸுதஃம் வஃரஸுணா ஸோநம் வாயஃரணாஂ, இஂத்ரஂ ஹொதெஹ வாவஃதெத.

(சினேகிதர்களே) அனேக (பகைவ)ர்களைத் துயரப்படுத்துகிறவரும், பெறத்தகுதியான மிகுந்த (பொருளின்) யஜமானனுமாகிய இந்திரனை ஸோமமானது அபிஷுதமாயிருக்கையில், எல்லாருமாய்ச்சேர்ந்து பாடுங்கள்.

(நு.) வவாதெநாயொம சூஷவதூஃரயெவவஃரஂய்யாஂ, மஹோஜஹிராவஃநஃ.

அவரே நமக்கு முன்னடையாதபேறுகளைத்தருக; அவரே பொருளை; அவரே பெண்டுகளை; * அவரே அன்னத்தோடு நம்மிடம் வருக.

(சு.) யவ்யவஂவ்ருந வ்ருணுத ஹரீவஸ்துஃ ஸுத்ர்யவஃ, தஸ்ராஇஂத்ராயமாயத.

யாருடைய தேரில் (கட்டின) இரண்டு குதிரைகளை யுத்தத்தில் சத்துருக்கள் தெருங்குகிறதில்லையோ † அப்பேர்ப்பட்ட இந்திரனுக்குப் பாடுங்கள்.

(நு.) வஃதவாதெவவஃதாஉதெ ஸஃவயொயஂ திவீதயெ, லொஸா லொஉய்யாஸிஃ.

அபிஷவம் பண்ணப்பட்ட வைகளும் (வடிகட்டிச்) சுத்தமாகியவைகளும், தயிரினால் தங்குற்றம் நீக்கப்பட்டவைகளுமாகிய இந்த ஸோமங்கள் அபிஷுத (ஸோம)த்தைக் குடிக்கிறவரிடத்திற்கு சாப்படப்படும்பொருட்டுப் போய்ச் சேருகின்றன.

வர்க்கம், க०.

(சு.) கூவஃவஃதவ்ய வீதயெ வஃதெவ்யாவ்யொகூஜாயயாஃ, இஂத்ரஜ்யேஷ்ட்யாய வஃக்ருதொத.

நல்ல கருமங்கள் பொருந்தியவரே, நீர் (தேவர்களுக்குள்) மூதுமை ‡ (அடையும்) பொருட்டு § அபிஷுத (ஸோ

---

* முன் ருக்குகளில் விவரித்த குணங்களையுடைய.

† யஜமானனுக்கு.

‡ இந்த யாகத்தில் 'திரிவிருத்' 'பஞ்சதசி' முதலிய ஸ்தோத்திரங்களைச் சொல்லுகிறவர்களே.

* 'புரந்தி' மிகுந்த புத்தி என்றுங்கொள்ளலாம்.

† தேரையும் குதிரைகளையுங் கண்டதும் ஓடிப்போகிறார்கள்.

‡ தலைமை.

§ "பொருட்டும் பானத்திற்காகவும்', என உரைசெய்யப்பட்டிருக்கிறது. மூலத்தில் உம்மை இல்லை.

ம)த்தின் பானத்திற்காக உடனே பெருத்திட்டீர். *

(எ.) சூகூரவிஶம்கூஶவஂ வொஶொஹ ஊஜ்ரிவ்ருணஂ, ஶம்தெஹஜ்ரு வ்ருதெதஹெ.

ஸ்துதிகளால் சேவிக்கத்தக்க இந்திரனே (மூன்று ஸவனங்களிலும்) வியாபியாகின்ற ஸோமங்கள் உம்மிடம் புகக்கடவது. (அவைகள்) உம்முடைய உயர்ந்த புத்திக்குச் சுகமானவைகளாகுக.

(அ.) கூவாம்ஹொஶகூவீர்யஂக்வா உக்ஷாஶதகூதொ, கூவாம வயஂஜ்ரு நொமிஷஂ.

மிகுந்த கருமம் பொருந்தியவரே! ஸ்தோத்திரங்கள் உம்மை உயர்த்தின; உக்தங்கள் உம்மை (உயர்த்தின) †(அப்படியே) எங்களுடைய வாக்குகளும் உம்மை உயர்த்தக்கடவது.

(கூ.) சுகூஷிதாதிஂ ஸநெஜிஂவா ஜிஂஜ்ரிஂ ஸஹஹிரணஂ, யஜ்ஞுவிஶ்வாநி வளஂஹ்வா.

அழியாத ரக்ஷணை மாற்றுகிற இந்திரனுவர், எல்லா ஆண்மைகளும் எதில் (தங்கியிருக்கின்றனவோ) அப்போர்க் கொத்த ஆயிரவகைப்பட்ட, இந்த (ஸோமமாகிய) அன்னத்தைச் சாப்பிடக் கடவது.

(க0.) ஶொஶதாஶ்வா சுஜிஜ்ரு ஹ ஜ நஞ்ஜநா ஜிஜ்ரிவ்ருணஂ, ஊஂஶ்வா நொயவயாவ்யஂ.

ஸ்துதியால் ஸேவ்யரான இந்திரனே! (சத்துருக்களாகிய) மனிதர்கள் (எங்களை) எதிர்த்து எங்களுடைய தேஹத்துக்குத் துரோகம் பண்ணுதிருக்க வலியராகிய (நீர்) கொலையை நம்மிடத்தினின்றும் தூரமாக்கும்.

சூக்தம், ஈ. (கூ.)

(ருஷியும், பாவும் முன்போல. முதல் மூன்று ருக்குகளுக்கும், கடைசி ருக்குகுமதேவதை இந்திரனும் மற்றவைகளுக்கு மருத்துக்கள் அதாவது காற்றுகள்.)

வர்க்கம், ஙங.

(க.) யஂஜஞி வ்ர்யஂஶஂஷஂவா ஜஂவ்ரிதஷ்டுஷஂ, ஶொஹஜெஶொ வநாஜிவி.

சுற்றிலும் நிலையாயிருக்கிற (மூவுலகத்திலுள்ள) வர்கள் மாட்சிமைபொருந்திய (சூரியனைகவும்) ஹிம்ஸகரில்லாத(அக்கினியாகவும்,) (எங்கும்) சஞ்சரிக்கின்ற (வாயுவாகவும்) உருவுகொண்டிருக்கிற இந்திரனே (தத்தங் கருமங்களில், தேவதையாக) இசைக்கிறார்கள். (மேலும் அவ்விந்திரனுடைய வேவேறு ரூபங்களான) நக்ஷத்திரங்கள் வானத்தில் பிரகாசிக்கின்றன. *

(உ.) யஂஜஞ்வ்ருகூஜ்ரா ஹரீவி வக்ஷவாஶயெ, ஶொணாய்ஷ்ணுரு வாஹஹா.

இவருடைய தேரில், காமுறத்தக்கவைகளும், ரக்தவர்ண மானவைகளும்,

---

* "உற்சாகமடைந்தீர்" எனப்பாஷியகாரர் பொருள் சொல்லுகிறார்.

† இதிற்சொல்லிய ஸ்தோத்திரங்கள் ஸாமவேதிகளுடையவென்றும், உக்தங்கள் யஜுர் வேதிகளுடையவென்றும் உரையாசிரியர் சொல்லுகிறார்.

* இந்தருக்கிலுள்ள பதங்களின்பொருள்.—

யஂஜஞி = சேர்க்கிறார்கள், வ்ர்யஂ = சூரியனை.

கூஷஂ = ஹிம்ஸகரில்லாதவனை, வாஶ = அடைகின்றவனை.

வ்ரி = சுற்றிலும், நவ்ருஷஂ = நிற்கிறவைகள்.

ஶொஹஜெ = பிரகாசிக்கின்றன. ஶொஹ நாஂ = நக்ஷத்திரங்கள்.

ஜிவி = வானத்தில். உரையாசிரியரானவர். = அக்கினி என்றும், கூஷஂ வாஶ்ருவா யுவென்றும் பொருள் செய்ய ஒரு பிராமணத்தின் ஆதாரத்தைச்சொல்லுகிறார்.

செருக்குற்றவைகளும், மனிதர்களை இழுக்கத்தக்கவைகளுமாகிய வறி (என்னு மிரண்டு) குதிரைகளை (சாரதிகள்) வெவ்வேறுபக்கங்களில் கட்டுகிறார்கள்.

(கூ.) கெத-ொகூணந கெதவெ வெஸாயூா கூவெஸுஹெ, ஸஃ-ஷஜ்ஜ ஈஜாயஸாஃ.

மனிதர்களே, இந்த ஆதித்தியரு பமானஇந்திரன்) உணர்வற்றவைகளுக்குணர்வும், * உருவற்றவைகளுக் குருவும் †உண்டுபண்ணுகிறவராய் எரிகதிர்களோடு (மறுபடியும்) உண்டானார், (இது என்னஆச்சரியம்! ‡

(ச.) சூஉஹவ்யா ஊவ-நமஃ ஹுகூ ஜெரிஸெ, உயாநா நாஃயஜ்ஞியம்.

யக்கியத்துக்குத் தகுதியான பேரைத் தரிக்கிறவர்களாகிய (மருத்துக்கள், மாரிகாலமுடிந்த) பின்பே, (இனியுண்டாகவேண்டிய ஜலத்தைநோக்கி, (மேகத்திலதற்கு) மறு கர்ப்பங்களை எவினார்கள்.

(ரு) வீஅ-விஹாஈ-ஜத-ஹிமஃ-ஹாவி திஂஜ்ரவஹ்நிஃ, சுவிஂஉஹ்யா கூஊ.

இந்திரனே, திண்மையான (அரண்களையும்) உடைக்கத்தக்கவர்களும், வேறிடத்துக்குக் கொண்டுபோகக் கூடியவர்களுமாகிய (மருத்துகள்) சகிதமாய், (நீர்) குகையில் (ஒளித்திருந்த பசுக்களையுந் தேடிக்கொண்டுவந்தீர். §

* இரவில் தூக்கத்தால் உணர்வழிந்த பிராணிகள்.

† இரவில் இருளினால் உருவந்தோற்றாதிருந்தவைகள்.

‡ அல்லது சூரியனையே முன்னிலையாக்கி "(மாலையிற்) செத்தவரே (மறுபடியும்) பிறந்தீர்" எனவுங் கொள்ளலாம்.

§ பூர்வகாலத்தில் அசுரர்கள் தேவலோகத்தின் பசுக்களைத் திருடிக்கொண்டுபோய் இருட்டான ஒரு குகையில் ஒளித்துவைத்தார்களென்றும், அவைகளை இந்திரன் மருத்துகளுடைய உதவியினால் தேடிக்கண்டுபிடித்துக்கொண்டு வந்தாரென்றும், ஓர் உபாக்கியானமிருக்கிறது.

வர்க்கம், கஉ.

(சு.) ஜெவயஜ்ஞாயஸாஃதி உஸ்ரா விஉ ஸ-ஂமிஸஃ, உஹாஃந-ஷுஷ்ட ஸ்ர-தம்.

தேவர்களை விரும்புகின்ற, புகழ் வோராகிய (ருத்துவிக்குகள்) அமிஞ்ஞகிய (இந்திரனை) எபபடியோ (அப்படியே) தன்பொருளை (ச்கொடையால்) விளக்குகின்றதும், மாட்சிமை பொருந்தியதும், புகழ் பெற்றதுமாகிய மருத்கணத்தை * ஸ்துதிக்கிறார்கள்.

(எ.) இஂஜ்ரணஸஂஹி ஊகூஸெ ஸஂஜமஃனெநா சுவிஹ்ய-ஷா, உஂஜ-ஷ ஸஃநந வஸ்ருஸா.

(வேற மருத்கணமே) நீ, அச்சமற்றஇந்திரனுடன் கூடச் செல்லுகின்றவனை எங்களால் பார்க்கப்படுவாயாக. (நீங்களிருவரும் நித்திய) சந்துஷ்டர், சமமானதேஜசுடையவர்கள் †

(அ.) கூநவஜெஸ்ரீ ஹிஸ்ய-ஹிஸ்ரு வஂஸஹஸ்ரஉஸ்ருதி, மமிணீஂஸ்ரஸ்ரு காஜெஸ்ரஃ.

(இந்த) யாகமானது குற்றமில்லாதவைகளும், வானத்திற் சஞ்சரிக்கின்றவைகளும், விரும்பத்தக்கவைகளுமாகிய (மருத்) கணங்கள் சகிதமாய், வலிமை பொரிந்திய இந்திரனைப் பூஜிக்கின்றது.

(கூ.) கூதஂவஸிஜ்ஞாஸ ஹிஜிவொவா ஸொஅநாஉயி, ஸவஸ்ருஹ்நு ஈஜதெஸ்ரஃ.

எங்கும் சஞ்சரிக்கின்றவர்களே, (உ

* மருத்துகளின்கூட்டம்.

† பூர்வத்தில் இந்திரன் விருத்திரன் என்னும் அசுரனோடு போர்செய்ய, சகல தேவர்களையுஞ் சேர்த்துக்கொண்டு போனபோது, அந்த அசுரனுடைய சுவாசத்தில் தேவர்களெல்லாரும்பறந்துப்போனார்களென்றும், பின்பு மருத்துகளுடைய உதவியால் இந்திரன் அவ்வசுரனை வென்றானென்றும் ஓர்கதையுண்டு.

மக்கிருப்பிடமாகிய) இந்த * (அந்தரிக்ஷத்திலிருந்தாகிலும்) வானத்திலிருந்தாகிலும், பிரகாசிக்கின்ற (சூரியமண்டலத்திலிருந்தாகிலும்) வாருங்கள், (இந்த) யாகத்தில் (ருத்துவிக்கானவர்) ஸ்துதிகளைச் செவ்வையாய்ச் செய்கிறார்.

(க०.) ஊதொவாவாஸாதீ3 உஹ்ஹி வொவாவாயிபுவாஹயி,ஊர்ஜ்ஂஉஹ்ஹா வா ஈராஜஸ்ஂ.

இந்திரனிடத்தில், இந்த மண்ணுலகத்திலிருந்தாவது, விண்ணுலகத்திலிருந்தாவது, விசாலமான அந்தரிக்ஷத்திலிருந்தாவது, † கொடையை (நாங்கள்) யாசிக்கிறோம்.

---

* கூ.ஃ இவ்விடத்திலிருந்து, அல்லது ஆகையால். உரையாசிரியர் முதற்பொருளை அநுசரித்து மேற்கண்டபடி அர்த்தம்பண்ணியிருக்கிறார். "அந்தரிக்ஷம்" அல்லது "அந்தரீக்ஷ.ம" என்பது "சுவர்லோகம்" ஆகிய வானத்திற்கும் "பூலோகத்திற்கும்" நடுவிலுள்ளவெளி. இதற்கு "புவர்லோகம்" என்றும் பெயர் வழங்கும்.

† இந்திரன் எங்கிருந்தாவது பொருள் கொண்டு வந்து எங்களுக்குக் கொடுக்கட்டும். என்று பொருள்.

மநுநூல் (தொடர்ச்சி.)

நுஉ. அந்தத்தேவன் எப்போது விழித்துக் கொண்டிருக்கிறாரோ, அப்போது இந்த லோகமானது, தொழில்செய்து கொண்டிருக்கிறது, எப்போது அவன்சாந்தாத்மனாய், தூங்குகிறாரோ, அப்போது எல்லாம், லயித்திருக்கிறது.

நுங. அவன் ஒழிவில் சிந்தையையுடையவனாய் தூங்கும்போது, கருமாத்து மாக்களாகியபிராணிகள், தங்கள்தங்கள் வேலைகளினின்றும், ஒழிகிறார்கள், மனஸ்ஸும் வேலையின்றி யொழிவை யடைகிறது.

நுச. எப்போது அந்த மஹாத்துமாவினிடத்தில், (பூதங்களெல்லாம்) ஏகதாலத்தில் லயிக்கின்றனவோ, அப்போது, பூதங்களெல்லாவற்றிற்கும் ஆத்துமாவாகியஇவன், வேலையினின்றும் ஒழிந்தவனாய் சுகமாகத் தூங்குகிறான்.

நுடு. இந்தச்சீவனவன், அறிவில்லாமையையடைந்து, இந்திரியங்களோடுகூடினவனாய், வெகுகாலமிருக்கிறான். தன்னதாகிய (மூச்சுவிடுதல்முதலிய) கருமத்தைச்செய்கிறதில்லை. அதன்பின்பு, அந்தத்தேகத்தினின்றும் வெளிப்படுகிறான்.

நுகூ. எப்போது, அணுமாத்திரகனாய், ஸ்தாவரமாகிய (மரமுதலியவற்றினுடைய) பீஜத்தையாவது, ஜங்கமாகிய (மனிதர் முதலானவர்களுடைய) பீஜத்தையாவது அடைகிறானோ, அப்போது (புரியஷ்டகத்தோடு) சேர்ந்தவனாய் வேறொருதேகத்தைப் பெறுகிறான்.

நுஎ. இப்படி, அவிநாசியாகிய அந்தப் பிரம்மாவானவர், தம்முடைய, விழுப்பு, தாக்கங்களினால் ஸ்தாவர சங்கமமயமாகிய இந்த லோகமெல்லாவற்றையும், எப்போதும் உயிர்ப்பித்து மரிப்பித்துகொண்டு வருகிறார்.

நுஅ. இந்தப் பிரம்மாவானவர், இந்தச் சாஸ்திரத்தைச் செய்து, அதை முதலில் எனக்கு விதிப்படி கற்பித்தார். நானும், (அதை) மரீசிமுதலிய ருஷிகளுக்குக் கற்பித்தேன்.

நுகூ. இந்தச் சாஸ்திர முழுவதையும், பிரகுவானவன், உங்களுக்குச்சொல்லுவான். எப்படியெனில், இந்த ருஷியானவன், இதெல்லாம் என்னிடத்தினின்றும், கற்றான்.

கூ0. அவ்வாறு அந்த மனுவினால் சொல்லப்பட்டவராய், அந்தப்பிருகுவானவர், சந்தோஷத்தையடைந்து, "கேளுங்கள்" என்று அந்த ருஷிகளெல்லாரையும் பார்த்துச்சொல்லத்தொடங்கினர்.

கூக. பிரம்மாவுக்குப் பேரனாகிய இந்த மனுவுக்கு, ஷட்வம்சப் பிரபவராகளாகிய வேறு மனுக்கள் உளர். மஹாத்துமாக்களாயும், மஹௌஜஸ்ஸுக்களாயுமிருக்கிற அவர்கள், தாங்கள்தாங்களாய்ப்பிரஜைகளை யுண்டு பண்ணினார்கள்,

சுஉ. (அந்த ஆறுபேர்கள் ஆனெனில்); ஸ்வாரோசிஷர், ஔத்தமர், தாமஸர், ரைவதர், சாட்சுஷர், அளவிறந்த வல்லமையை யுடையரான (சூரியன்மகனுன) வைவஸ்வதர் ஆகிய இவர்கள்.

சுங. அளவிறந்த வல்லமைசாலிகளாகிய, ஸ்வாயும்புவர் முதலிய ஏழு மனுக்களும் தங்கள் தங்களுடைய அதிகாரகாலங்களில், ஸ்தாவரசங்கமமயமாகிய வெல்லாத்தையும் உண்டுபண்ணிக் காப்பாற்றினர்கள்.

சுச. பதினெட்டு இமைப்பொழுதுகள், ஒரு காஷ்டையாகின்றன. முப்பது காஷ்டைகள் சேர்ந்தால் ஒரு கலையாகிறது. முப்பதுகலைகள் சேர்ந்தால் ஒரு முகூர்த்தமாகிறது. முப்பது முகூர்த்தங்களை ஒரு இராப்பகலாக (அறியவேண்டியது.

சுடு. தேவர்களுக்கும் மனிதர்களுக்கும், இராப்பகல்களைச் சூரியன் பிரிக்கிறான் இரவானது உயிர்கள் தூங்குதற்பொருட்டும், பகலானது, தொழில்செய்தற்பொருட்டும், (உபயோகமாகிறது.)

சுசு. (மனிதர்க்கு) ஒருமாசமாயிருப்பது, பிதிருதேவர்களுக்கு ஒருநாளாகிறது. அதை இரண்டு பட்சங்களாகப் பிரித்து, அவைகளில் கிருஷ்ணபட்சமானது, தொழில்செய்வதற்காகப் பகலாயும், சுக்லபட்சமானது, தூக்கத்துக்காக, இரவாயும், ஆகிறது.

சுஎ. (மனிதர்க்கு) ஒரு வருஷமாயிருப்பது, தேவர்களுக்கு ஒருநாளாகிறது. அதைப் பிரிக்கிறவகையிது (மனிதர்க்கு) உத்தராயணமாயிருப்பது, பகல், தட்சிணாயனமாயிருப்பது இரவு.

சுஅ. பிரம்மாவினுடைய இராப்பகலின் பிரமாணம் எவ்வளவோ, அதையும் சுருக்கமாக (சொல்லப்போகிற) யுகங்களுடைய பிரமாணத்தையும், ஒவ்வொன்றுக முறைப்படி அறியுங்கள்.

சுகூ. (தேவர்களுடைய) வருஷம் நாலாயிரம் கூடினது, கிருதயுக மென்பார்கள். (அதற்கு முற்பட்ட) சந்தியையானது, அவ்வளவு நூறுவருஷங்களுடைய து. (அதற்குப்பிற்பட்ட) சந்தியாமிசமென்பதும் அவ்வகைப்பட்டதுதான்.

எ0. மற்ற மூன்று யுகங்களிலும், சந்தியைகளிலும் சந்தியாமிசங்களிலும், (முன்சொன்ன) ஆயிரங்களும், நூறுகளும், ஒவ்வொன்றுக குறைந்துவருவன.

எக. முதலில் எது, (மனிதர்க்கு) நாலுயுகமாக எண்ணப்பட்டதோ, அந்தப் பன்னீராயிரம் வருஷமும் சேர்ந்து, தேவர்களுக்கு யுகமென்று சொல்லப்படுகிறது.

எஉ. எண்ணீரால் தேவர்களுக்கு ஆயிரம்யுகமாயிருப்பது, பிரம்மாவுக்கு ஒரு பகலாக அறியத்தக்கது. இரவும் அவ்வவ்வளவு பிரமாணத்தை யுடையதுதான்.

எங. எவர்கள், பிரம்மாவினுடையதினத்தை, ஆயிரம்யுகங்கள் யெல்லையாகவுடையதாயும், புண்ணியத்துக்கு ஏதுவாயும், இராத்திரியையும், அவ்வளவு பிரமாணத்தை யுடையதாயும் அறிகிறார்களோ அவர்களே இராப்பகல்களை யறிந்தவர்கள்.

எச. அந்தப் பிரம்மாவானவர், அந்த இராப்பகலின் முடிவில் தூங்கிவிழித்துக் கொள்ளுகிறார். விழித்துக்கொண்டவுடன், ஸதஸதாத்துமகமாகிய மனதை ஸ்ருஷ்டிக்கிறார். (அதாவது ஸ்ருஷ்டியின்பொருட்டு ஏவுகிறார்.)

எடு. (பரமாத்துமாவினுடைய) ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்கிற விருப்பத்தினாலே யேவப்பட்டதாய், மனமானது ஸ்ருஷ்டியைச்செய்கிறது. அதனால் ஆகாசமுண்டாகிறது. அதற்குச் சப்தத்தைக்குணமாக அறிந்தார்கள்.

எசு. விகாரசனகமாயிருக்கிற ஆகாசத்தினின்றும், வாசனைகளெல்லாவற்றையும் வகிப்பதாய், சுத்தமாய், பலவத்தாயிருக்கிறவாயு உண்டாகிறது. அதற்குஸ்பரசம்குணமென்பது அபிப்பிராயம்.

எஎ. விகாரசனகமாயிருக்கிற வாயுவினின்றும், பிறபொருள்களைவிளங்கச்செய்வதாயும், இருளையழிப்பதாயும், பிரகாசத்தை யுடையதாயுமிருக்கிற தேஜ

ஸ்ஸானது உண்டாகிறது. அது ரூபத்தைக்குணமாகவுடையதென்று சொல்லப்படுகின்றது.

எஅ. விகாரசனகமாயிருக்கிற தேஜஸ்ஸினின்றும் ஜலம் உண்டாகிறது. அது இரஸத்தை குணமாகவுடையதென்று சொல்லப்படுகிறது. ஜலத்தினின்றும் வாஸனையைக்குணமாகவுடைய பிருதிவி உண்டாகிறது. இதுதான் ஸ்ருஷ்டியின் முறை.

எக. எதுமுன்னே (மனிதர்களுடைய) வருஷங்கள் பன்னீராயிரத்தின் சேர்க்கையாகிய தேவயுகமாகச் சொல்லப்பட்டதோ, அது எழுபத்தொன்று கொண்டகாலம் இந்ததூலில் மனுவந்தரம் என்று சொல்லப்படுகிறது.

அ0. இப்படிவருகிற மனுவந்தரங்கள் கணக்கற்றன. ஸ்ருஷ்டியும், ஸம்ஹாரமும் அப்படியே. இதை பிரம்மாவானவர், திரும்பவுந் திரும்பவும், விளையாட்டாகச் செய்துகொண்டிருக்கிறார்.

அக. கிருதயுகத்தில் எல்லாத்தருமமும், சத்தியமும், நாலுகால்களையுடையன. (அது பூர்ணமாயிருப்பன.) அதர்மத்தின் மூலமாய் மனிதர்க்கு யாதொரு வரவும் உண்டாகிறதில்லை.

அஉ. மற்றயுகங்களில் (கெட்டவழிகளால்) பொருள் வருமான மூண்டாகிறபடியினாலே, தருமமானது ஒவ்வொருபாதமாய்க் குறைக்கப்படுகிறது. திருடு, பொய், வஞ்சனை, இவைகளால், (நல்வழியால் பொருள் சம்பாதித்தலாகிய) தருமமும், ஒவ்வொரு பாதமாய்க் குறைந்துவருகிறது.

அங. கிருதயுகத்தில், பிரசைகள், பிணியற்றவர்கள். விரும்பிய பயன்களையெல்லாம்பெறுபவர். நானூறுவருஷ அளவுள்ள ஆயுஸ்ஸை உடையவர். திரேதைமுதலியவற்றில் இவர்களுடைய ஆயுஸ்ஸானது கால் கால் பங்காகக்குறைந்துகொண்டேவருகிறது.

அச. மனிதருக்கு வேதத்திற்சொல்லப்பட்ட ஆயுளும், கருமங்களுடைய பயன்களும், தேகமெடுத்தவருடையபெருமையும், யுகத்திற் கேற்பபயனைத் தருவன.

அடு. மனிதருக்கு கிருதயுகத்தில், சிலதருமங்களுகம், திரேதையில்வேறுதருமங்களும், துவாபரத்தில்வேறுதருமங்களும், கலியுகத்தில் வேறுதருமங்களும். யுகத்தின் குறுகுகைக்கு எட்டளவாக நடப்பன.

அசு. கிருதயுகத்தில், தவம்சிறந்ததாகச்செல்லப்படுகிறது. திரேதையில், ஞானம், துவாபரத்தில் வேள்வியையேசொன்னார்கள். கலியுகத்தில் தானமொன்றையே (சொன்னார்கள்.)

அள. இந்தஸ்ருஷ்டியெல்லாவற்றையும்காப்பாற்றுதற்பொருட்டு, மஹாதேஜஸ்ஸையுடைய அந்தப்பிரும்மாவானவர், முகம், கை, தொடை, கால, இவைகளினின்றும், உண்டானவர்களுகது, வேறுவேறு தொழில்களையுண்டுபண்ணார்.

அஅ. பிராமணர்களுக்கு. வேதமோதுதலையும், ஓதுவித்தலையும், யாகஞ்செய்தலையும், செய்வித்தலையும், தானஞ்செய்தலையும், பெற்றுக் கொள்ளுதலையும், (தொழிலாக) உண்டுபண்ணினார்.

அகூ. பிரஜைகளைக்காத்தல், கொடை, யாகஞ்செய்தல், வேதமோதுதல், விஷயங்களில் பற்றில்லாமை, இவைகள் ஒரு தொகையாகச் சொல்லுமிடத்து, அரசனுடைய தொழில்களாகின்றன.

கூ0. பசுக்களைக் காத்தல், கொடை, யாகஞ்செய்தல், வேதமோதுதல், வியாபாரஞ்செய்தல், வட்டிக்குப் பணங்கொடுத்தல், பயிர் செயதல், இவைகளை வைசியனுக்குத் தொழிலாகப் பிரம்மா, உண்டுபண்ணினார்.

கூக. சூத்திரனுக்கு, அசூயையின்றி மேற்சொல்லிய வருணங்களுக்கு ஊழியஞ்செய்வதொன்றையே, தொழிலாகவுண்டு பண்ணினார்.

கூஉ. புருஷன், நாபிக்குமேல் சிறந்தசுத்தியை யுடையவனென்று பிரம்மாவால்) சொல்லப்பட்டான். அந்த அங்கத்திலெல்லாம், முகமானது உயர்வற்ற

சுத்தியையுடையதென்று (பிரம்மாவால்) சொல்லப்பட்டது.

கூக. முகத்திற் பிறந்தபடியினலும், (மற்றவருணங்களுக்கு) முன்பிறந்திருப்பதினலும், வேதத்தைத் தரிப்பதினலும், இந்த போகத்துக்கெல்லாம், நியாயப்படி பிராம்மணனே தலைவனுகிறன்.

கூச. பிரம்மாவானவர், ஹவ்வியகவ்வியங்களை (தேவர்களுக்கும், பிதிர்களுக்கும்) கொடுத்தற்காகவும், தவஞ்செய்தது, இது வெல்லாவற்றையும், காத்தற் பொருட்டும், அந்தப்பிராமம்மனை, மற்றவருணங்களுக்கெல்லா முன்பாகத்தன் முகத்தினின்றும் உண்டுபண்ணினர்.

கூரு. யாருடைய முகத்தின் மூலமாய்த் தேவர்கள் ஹவ்வியங்களையும், பிதிருக்கள்கவ்வியங்களையும், எப்போதும் உண்கிறார்களோ, அவனினும் சிறந்தபூதம் எது?

கூசு. பூதங்களுக்குள், உயிரோடிருக்கிற ஜந்துக்கள் சிறந்தன. பிராணிகளுக்குள் புத்தியுள்ளன சிறந்தன. புத்தியுள்ளஜந்துக்களுள், மனிதர் சிறந்தவர். மனிதர்க்குள் பிராமணர்கள் (சிறந்தவராக) நினைக்கப்பட்டிருக்கிறார்கள்.

கூள. பிராமணருள் புலவர் சிறந்தவர். புலவர்களில் (கருமங்களைச்செய்யவேண்டுமென்கிற) விருப்பமுடையவர் சிறந்தவர். விருப்பமுடையவருள் (அந்தக் கருமங்களைச்) செய்பவர் சிறந்தவர். செய்பவர்களுள் பிரம்மத்தையறிந்தவர் சிறந்தவர்.

கூஅ. பிராமணனுடைய பிறப்பே அழிவில்லாத, தருமத்தினுடைய அவதாரமாகிறது. அவன்தருமத்திற்காக வுண்டானவன் பிரம்மத்தை யறிதற்கு வல்லவனுகிறன்.

கூக. பிராமணன் உண்டாகும்பொழுதே பூமியில உயிர்களுக்கெல்லாம் மேலாகிறன். தருமங்களெல்லாவற்றின் கூட்டதைக் காப்பாற்ற (அவனே) வல்லவன்.

க00. இந்தவுலகத்தில் எந்தெந்தவஸ்து இருக்கிறதோ அதெல்லாம் பிராமணருக்குச் சொந்தமாகிறது. அவன்முதலிற்பிறந்தவனும், உயர்ந்தகுலத்திற் பிறந்தவனுமிருப்பதனல், எல்லாவற்றையும் அவன்பெறத்தக்கவனுகிறன்.

க0க பிராமணன்தன்னுடைய உணவையேஉண்கிறன். தன்உடையையே உடுக்கிறன். தன்னுடைய உடைமையையேகொடுக்கிறன். அவனுடையதையினலேதான் மற்றவர் உண்கிறார்கள்.

சரித்திரம்.

பூர்வபாகத்தில் குறிப்பிட்டபடி பட்டணங்களுக்கு ஸ்வாதந்திரியாபி விருத்தியுண்டானது இடெலியில் மாத்திரமல்ல. பிரான்சிலு மவ்வாறே யுண்டாயிற்று. லூயி-லி-க்ரூஸ் என்பவன், அரசன் பலத்தையடக்கி யவனுக்கு விதியளிக்கத் துணிந்த கொழுத்த குடிகளை யெதிர்க்கும்பொருட்டு வல்லமையுடைய ஒரு நூதன பலத்தையேற்படுத்தக்கருதி, தன் னெல்லைக்குட்பட்ட நகரங்களுக்குச் சில நவீன ஸ்வாதந்திரியங்களைக் கொடுத்தான். இவற்றிற்குப் "பொது ஸ்வதந்திரங்கள்" என்று பெயர். இவற்றால் குடிகள் அடிமையெனும் பந்தத்தினின்று விடுபட்டு, இனங்களை யுண்டாக்கிக் கொண்டு, ஒவ்வொருஇனத்தாரும் தங்கள் தங்களெல்லைக்குள், நியாயத்தலைவரையும், ஆலோசனை சபைகளையும், நியமித்துக்கொள்ள அதிகாரம்பெற்றார்கள். இந்நியாயத்தலைவருக்குத் தங்கள் சரஹத்துக்குள் நியாய விசாரஞ்செய்யவும, வரிகளிடவும் சேனைகளுக்கு யுத்தப்பயிற்சி கற்பித்து, அரசனுக்கு வேண்டும்போது தம்மவருள் சிலரை அவற்றிற்குத் தலைவராக்கி, யுத்தபிரயாணத்துக்குச் செல்லத் திட்டஞ்செய்யவும், அதிகாரங்கொடுக்கப்பட்டது. அரசனிவ்வித ஏற்பாடு செய்ததைக்கண்டு, பெருங்கனவான்களும், தம் மெல்லைக்குள்ளுமவ்வாறே செய்தார்கள். ஜருஸலயுத்தத்திலுல்கை முற்றும்வரண்டிருந்த அவர்கள் இந்நூதனவுபாயத்தைக் கைக்கொண்டு, ஸ்வதந்திரங்களை விக்கிரயதானம்செய்து, அதினுல் பணத்தைச்சேகரிக்கமுயன்றனர்.இவ்வேற்பாடுதங்களபிப்பிராரயத்துக்குநேர்விரோதமாயும்,பலக்குறைவுக்கேதுவாயுமிருக்கினும், அவர்கள்தூரதிருஷ்டியைச் செலுத்தியோசிக்காமல் தாத்காலிக ரன்மையையே முக்கிய

மாய்க் கருத்திற்கொண்டார்கள். இவ்வாறு இருனூறு வருஷம் கழிவதன்முன்னமே, பிரான்சில் முக்கால்பங்குக்கு அடிமையென்பதொழிந்து, மற்றும் ஸ்வாதந்திரியமும் அதிகாரமுமற்று அன்னியாயமாயிருந்த ஜனங்களெல்லாம் ஸ்வதந்திர ராச்சியங்களாயின. சுமார் அத்தருணத்திலேயே, ஜெர்மானியாதேசத்துப் பெரும்பட்டணங்களுக்கும் இவ்விதஸ்வாதந்திரியங்களுண்டாகி, இக்காலத்தில் அந்த தேசத்துக்குண்டாயிருக்கும் பலத்துக்கும் ஸ்வாதீனத்துவத்துக்கும், அஸ்திவாரம்போன்றன. இந்தவழக்கம் யூரோப்புமுழுதும் நொடியிற்பரவி, ஸ்பெயின், இங்கிலாண்டு, ஸ்காட்லண்டு, முதலிய பியூடல் ராஜியங்களில் கொள்ளப்பட்டது.

இந்த நவீன வேற்பாட்டினால், நற்பயன் சீக்கிரத்திலே விளைந்தது. அதனால், அரசியலுக்கும், குடிகளினெழுக்கத்திற்கும், அதிக விருத்தியும், க்ஷேமமும் அடிமையாலும் நிஷ்காரணமாயிடப்பட்ட அன்னியாய வரிகளாலுமெலிந்து கசைந்த அனேககுடிகளுக்கு அடிமை நீங்கி, ஸ்வாதினத்துவமும் உண்டாயின. பட்டணங்களில், இனவகுப்புகளும் தத்ஸம்பந்த ஸ்வதந்திரங்களுமுண்டான பிறகு, அவையொவ்வொன்றும்சமவிதிகளால் கட்டுப்பட்ட குடிசைப்போன்றது. ஸ்வாதீனத்தையவற்றில் அதிகமாக மதிக்கப்பட்டு எந்த அடிமையாலும் அவற்றில் அடைக்கலம்புகுந்து ஒரு வருஷகாலம் மீட்டுக்கொள்ளப்படாமல் வசித்தால், அவனே அக்குடிகள் ஸ்வதந்திரனுக்கி, தம்மினத்தோடு சேர்த்துக்கொண்டனர்.

நிருபம்.

எனதன்புள்ளசோதர்களே,

சமயாதீத சத்தியவேதாந்த மார்க்கத்தை யெங்கும் பரவச்செய்து எல்லோருக்கும் பரமசுகமுண்டாக்க வேண்டுமென உங்கள் சமாஜத்தார் செய்யும் நன்முயற்சி அப்பொழுதே பயன்கொடுக்க வாரம்பித்ததென்பதைக் கேட்க நீங்கள் மிகவுஞ் சந்தோஷப்பீர்களல்லவா. இச்சேலநகரங் கீர்த்தியுற்ற சென்னையோடு மொயில் மூலமாகச்சேர்க்கப்பட்டது முதல் நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகின்றது. ஆதலின் இவ்விடத்திலுள்ள சில புண்ணியவான்கள் வேதோக்தமாகிய உங்களுடைய சத்தியமார்க்கத்தை அவலம்பித்து, நித்திய நிர்மல நிஷ்களங்க அவாங்கமானஸகோசரஆநந்தஸ்வரூப அத்துவித ஏகநாயகனுகிய **அதிருசியபரப்பிரம்மத்தை பிரார்த்தனைரூபமாகத்** தொழும்படி, வாரத்தில் இரண்டுநாள் சபைகூடுகின்றனர். இச்சபையார் பிரதிசெவாய்க்கிழமை வெள்ளிக்கிழமை சாயங்காலம் ஏழுமணிமுதல் எட்டுமணிபரியந்தம் வேதாந்த விஷயப்பிரசங்கமும் பரப்பிரம்மபரமாக ஸ்தோத்திரங்களுஞ் செய்கின்றனர். இவர்களுடைய நடைவடிக்கைகளைப் பிரசுரப்படுத்த உங்களது அழகிய **தத்துவபோதினி** சிறிதிடங் கொடுக்க இஷ்டப்படுமாயின் அவைகளை வருகிறமாதத்தில் அனுப்புகிறேன். இத்திருச்சபைவாழும்படி ஆசீர்வதிப்பீர்களாக. எனதன்பர்களே உங்களுடைய சமாஜத்தின் அபிவிருத்தியை மனப்பூர்வமாக விரும்பியவருள் ளொருவனுகிய,

சூ அசூடி-ம்வல
மேமீ
சேலம்.

அடியேன்
ஒருசுதேசி,
சேலநிவாசி,

ம - ா - ா. தத்துவபோதினிகர்த்தரவர்களுக்கு.

ஐயா,

அடியில் யான்வரையும் சிலவரிகளுங்கு தங்கள் பத்திரிகையில் சிறிதிடம்கொடுத்து அச்சிடுவிப்பீர்களென்று வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது புதிதாக பிரசுரப்படுத்தப்பட்டிருக்கிற "வேதசமாஜ கண்டனம்" என்னும் புத்தகத்தை இன்றுதான் கண்டனன். அபிதானத்தைப் பார்த்தவுடன் ஆ! இப்படிக்கும் நமது தேசத்தில் பிறர் குற்றங்களைக்களையும் கண்ணருள் நிறைந்த பெரியோரும் இருக்கின்றனர் அல்லவா? ஆனால் இப்புத்தகத்தில் ஏதோ ஒரு மகத்துவம் இருக்கவேண்டும்; இன்றேல் இப்பெயர் இதற்கு ஏன் இடப்படும், என நிச்சயித்து புத்தகமுழுமையும் பரிசோதித்துப்பார்க்கையில் "பேருகங்காதேவி, தாகபோதே நீள்ளுலேது" என்கிறபடி பாலகிருணபிரயோஜனமும் இல்

லையெனத் தெறிந்தேன். ஆனல் இருந்த துதான் என்னவென்றுலோ அழுகிறகு முந்தைக்கு வாழைப்பழம்போன்று, பாமர பிரஜைகளுக்கிதமான சிலவேடிக்கைக்கதைகளும், குயுக்திகளும், குசேஷ்டைகளும், நிரம்பிய சிலதூஷணைகளும், அடங்கியிருந்தன வென்று சொல்லயான் பிவ்வாங்கேன்.

தூக்கிப்பார்க்கையில் இச்சஞ்சிகையியற்றியபரமபுருஷர் "ஆய்ந்தோய்ந்துபாராதவன்தான்சாகக்கடவன்" என்பதைச் சிறிதாயினும் கவனிக்காமல்தீர்க்காலோசனையின்றி உன்னைபார்த்ததால் என்னைஅடிக்கவருபவன்போல் இருக்கிறுய் "ஆகையால் நீமுண்டம்" என்பதுபோல் நிஷ்காரணமாய் பிறர்மேல் தோஷாரோபணை பண்ணினவராகத் தோற்றுகிறதேயன்றி வேறுயாதொரு நன்மையைப்பற்றி இக்காரியத்துக்குட் பட்டவரென்று தோற்றவில்லை.

ஏனெனில் இவர் உண்மையாய்வேதசமாஜிகளின்குற்றங்களைப் பிரசைகளுக்கு எடுத்துக்காட்டி உண்மையூட்டவந்தவரேயாமாயின், மேற்படி நிபந்தனைகளைக் கண்டிக்கப் பிரயோகித்த ஆதாரங்களும் உதாரணங்களும், கிரமமாயும், வொப்புக்கொள்ளத்தக்க வைகளாயும் இருத்தகூடும். பிறரை தூஷிப்பதிலேயே தாம் யோக்கியரென்றும்சர்வக்கிரென்றும், காட்டவிரும்பினவர் ஆக்ஷேபத்திற்கு இடமில்லாதவிதிகளில் துராக்ஷேபனை யுண்டாக்கியது ஒருபுதுமையோ ?

"கோத்தின்னுகூறி யுனையாக்கால் பேதைக்கு நாத்தின்னும் நல்லசுனேத்து" என்கிறபடி அவர் ஏன் சும்மாயிருப்பர்

இவர்தான் இப்படியென்றுலோ இவர் செய்ததை அங்கீகரித்த மகானுபாவர்களும், இவர் வலையுட்சிக்கித்தமக்குமுன்னிருந்த பெருமையும் இழக்கலாயினர். தாம்ஏறியிருப்பது முருங்கக்கிளையென்றுகிஞ்சித்தாயினும் ஆலோசிக்காமல் இக்காரியத்தில் ஏன் தலையிட்டுக்கொண்டனரோ அறியேன்.

"பள்ளிக்குப்பத்துச்சு அம்பட்டன் வாத்தியார்" என்கிறபடி இவர் கண்டிக்கவாவது, அவர்கள் அங்கீகரிக்கவாவது, வெகு யோக்கியம்! வெகு வேடிக்கை! வெகு நன்றுயிருக்கிறது! மேலும் கிரந்தகர்த்தர் சிலஇடங்களில் எடுத்துக்காட்டிய மேற்கோள்களுக்குச்செய்த அநர்த்தங்களை நினைக்கநினைக்க விந்தையாக இருக்கிறது. சிலநிபந்தனைகட்கு அவர் பொருள்செய்த அழகே அழகு. இதனலேயே அவர் அத்புதபாண்டித்திய முற்றவரென்று சொல்ல யார் சந்தேகிப்பார்! இவர்கள் பெருமையும், பொறுமையும், நிறமையும், யோக்கியதையும், ஒருவனல் எடுத்துக் கூறப்படவேண்டுமோ ?

"கன்றுகள்கூடி களம்பறித்தால் வைக்கோலும் ஆகாது சத்தையும் ஆகாது" என்கிறபடி இக்காரியத்தால் இவர்களுக்கு என்னபயன்வாய்த்தது ? "உள்ளதும் பேச்சடா கொள்ளக்கண்ணு" என்பதுபோல் இருந்தமரியாதைக்கும்தாமேஹராவிருவித்துக்கொண்டார்கள். எப்படிப்பட்டமூடனும் அப்புத்தகத்தைப்பார்த்தவுடன் அதின் தன்மையையும், சிறப்பையும்,தெளிவாயும், சுலபமாயும் அறியக்கூடும்,ஆதலால் இன்னும் இதைப்பற்றி விசேஷித்தெழுவது அனாவசியகமும்,அனுசிதமுமாக இருக்குமென்று இவ்வளவுடன் முடிக்கலாயினேன்.

ஆனலும் வேதசமாஜ சோதர்கள் மேற்படி புத்தகத்தில்கண்ட பிரதிஆக்ஷேபனைக்கும் சமாதானம்சொல்லி சயிக்கவேண்டுமென்றுகேவலம்பாமரரைப்போல்அவஹங்காரகுரோதாபிமானிகளாய்இடுப்புகட்டாவிடினும், கற்றறிமோழைகள் செய்யும் துராக்ஷேபனைகளையும், கொண்டிருக்கும் துரபிமானங்களையும் ஒருவாறு நீக்கும்படி தகுந்த பிரதிகாரமொன்றைக்கூடியவிரைவில்செய்வார்கள் என்பதற்கு சந்தேகமில்லை யென்று எண்ணுகிறேன்.

இங்ஙனம்.

பி. கே.

உண்மைவிரும்புவோன்.

புஸ்தகவிளம்பரம்.

சென்ற வருஷம் கக - வது நெம்பர் தத்துவபோதினியில் விவரித்தவாறு இயற்றப்பட்ட பாலவியாகரணம் என்னும் கிரந்தம் கிரந்தத்திலும் தமிழிலும்மணிப்பிரவாளமாக அச்சிடப் பட்டுஸித்தமாக இருக்கிறது. இதின்விலைபிரதியொன்றுக்கு ச-அணுவாகிறது. வெளியூலுள்ளவர்கள் தபால்கூலிக்காக க-அணை சேர்த்து அனுப்பவேண்டும். பத்து பிரதிகளுக்கு அதிகம் வாங்குவோருக்கு தபால்கூலியன்றியே அனுப்பப்படும். இதற்காக தபால்முத்திரை ரூபமாக பணம் அனுப்புவோர் ரூபாய்க்கு க-அணுவீதம் மாற்று வட்டம்சேர்த்து அனுப்பவேண்டும். இதுதவிர இதரக்கிரந்தங்களும் அச்சாய்க்கொண்டு வருகின்றன.

விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம் செய்பவர்கள் அனுப்புந்தொகை சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மருமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும் கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு,

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

	காப்பி.
சென்னை, சங்கரையர் - பி - ஏ.	க
,, முத்துசாமிமுதலியார்.	க
,, பார்த்தசாரதிமுதலியார்.	க
,, சிவராமையர்.	க
,, ராமாராவு.	க
,, தொரைசாமிமுதலியார்.	க
,, இரத்தினபிள்ளை.	க
,, கந்தசாமிமுதலியார்.	க
,, செ - சேஷையங்கார்.	க
,, சி - ரங்காச்சாரியர்.	க
,, பு - விஜயரங்கபிள்ளை.	க
,, ப-மோ-முருகேசமுதலியார்.	க
,, இராமசந்திரநாயுடு.	க
சென்னை.	காப்பி.
,, அப்பாவுபிள்ளை.	க
,, ஜெகன்னாதசெட்டியார்.	க
,, முருகேசம்பிள்ளை.	க
,, சுப்பையர்.	க
,, தர்மலிங்கமுதலியார்.	க
,, அண்ணாதுரைபத்தன்.	க
,, சுப்பராயபிள்ளை.	க
சத்தியமங்கலம், பெத்தநாயக்கர்.	க
,, ராமையர்.	க
,, நாராயணசாமிநாயுடு.	க
,, வீராசாமிநாயக்கர்.	க
,, லிங்கவுண்டன்.	க
,, அப்பாவையர்.	க
,, கிருஷ்ணசெட்டி.	க
,, கவுண்டவுண்டன்.	க
,, மாதேவவுண்டன்.	க
,, அங்கப்பாசாரி.	க
,, சென்னியப்பவுண்டன்.	க
,, சிவகுருசெட்டி.	க
,, கருதிருமேகவுண்டன்.	க
,, வெங்கிட்டராமபிள்ளை.	க
,, வீரிசெட்டி.	க
,, காசிலிங்கவுண்டன்.	க
,, ஸ்ரீனிவாச அய்யர்.	க
,, முத்துவெல்லப்பவுண்டன்.	க
,, பத்மநாப அய்யர்.	க
,, வாரிவுண்டன்.	க
கொயம்புத்தூர் - சேஷையர்.	க
,, கிருஷ்ணசாமி அய்யர்.	க
,, கிருஷ்ணஅய்யர்.	க
,, காசிவிஸ்வநாதமுதலியார்.	க
பெங்களூர், கிருஷ்ணசாமிமுதலியார்.	க
ஆர்க்காடு - பொன்னரங்கமுதலியார்.	க
மதுரை - முத்துசாமி ஒத்தப்பநாயக்கர்.	க
கூடலூர் - கோபாலசாமி அய்யர்.	க
,, தொரைசாமிநாயுடு.	க
நாகபட்டினம் - ஸெவரண்டுஜார்ஜ்பிரயர்.	க
,, அய்யாவையர்.	க
சிதம்பரம் - வெங்கிட்டராயர்.	க
,, மாணிக்கமுதலியார்.	க
தூத்துக்குடி - சுவாமிநாத அய்யர்	க
,, சுப்பிரமண்ணியபிள்ளை.	க
தஞ்சைநகரம் - அய்யாசாமிசாஸ்திரி.	க
சேலம், ப - கிஷ்ணமாசாரியார்.	க
,, வருதராஜுலுநாயுடு.	க
,, டி - கணபதிஅய்யர்.	க
,, அண்ணுசாமிமுதலியார்.	க
,, வெங்கடரமணய்யர்.	க
,, அப்பு அய்யங்கார்.	க
,, கிருஷ்ணசாமிமுதலியார்.	க
,,சந்திரய்யர்.	க
நாமக்கல், கோபாலசாமிமுதலியார்.	உ

విళంబరం.

తమిళిలుం, కిరంతత్తిలుం, మణిప్పిరవాళమాయ్ కుణుక్కరంబాక్కం - కోపాలాచారియరాల్ అచ్చిటప్పట్ట తనిసిలోకి పుతల్సమపుటం నోరాయ్ వాంగువోరుక్కు పిరతి ఒన్రుక్కు వీలి రూపాయ్ - ఉ. తపాలిల్ అనుప్పప్పడుమ్పక్షత్తిల్ పిరతి యొన్రుక్కు తపాల్కూలి అణా - ఉ. పత్తుపిరతిక్కుమేల్ వాంగువోరుక్కుత్ తపాల్ కూలియిల్లామల్ అనుప్పప్పడుమ్.

☞ ఇదు తత్త్వబోధిని అచ్చుక్కూడత్తిల్ విర్కప్పడుకిరతు.

దేవస్తుతి.

బన్నువరాళిరాగం - అటతాళచాపు.

పల్లవి.

బహ్వనలంబనంత్వక్త్వా - మన్దబుద్ధే - బ్రహ్మైవైకంజానథ.

అనుపల్లవి.

ఇహచేదవేదీ - దథనత్యమస్తి,
నచేదిహవేదీ - న్మహతీవినష్టిః. (బహ్వ.)

చరణములు.

౧. ఏకోవశీ, సర్వ - భూతాన్తరాత్మా,
ఏకంరూపంబహు - ధాయఃకరోతి;
తమాత్మస్థంయేను - పశ్యన్తిధీరాః,
తేషాంసుఖంశాశ్వతం; నేతరేషాం. (బహ్వ.)

౨. నిత్యోనిత్యానాం - చేతనశ్చేతనానాం,
ఏకోబహూనాం - యొవిదధాతికామాన్;
తమాత్మస్థంయేను - పశ్యన్తిధీరాః,
తేషాంశాన్తిశ్శాశ్వతీ; నేతరేషాం (బహ్వ.)

౩. ఏకోవశీ, నిష్క్రి - యాణాంబహూనాం,
ఏకంబీజంబహు - ధాయఃకరోతి;
తమాత్మస్థంయేను - పశ్యన్తిధీరాః,
తేషాంసుఖంశాశ్వతం; నేతరేషాం. (బహ్వ.)

చెన్నపట్టణం,—తత్త్వబోధిని అచ్చుక్కూడత్తిల్, కా. తెయ్వశికామణి ముదలియారాల్ పదిప్పిక్కప్పట్టదు.